விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 24 திங்கட்கிழமை (09.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 233

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெ

## பக்திப் பரவசம் பொங்கி எழ மாவைக் கந்தன் தேரில் வந்தான்

(மாவிட்டபுரம்)


வரலாற்றுப் புகழ் மிக்க மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நேற்றுக் காலை இடம்பெற்றது.

அதிகாலையில் வசந்தமண்டபப் பூஜையைத் தொடர்ந்து காலை 10.40 மணியளவில் சுவாமி தேரில் ஏறி திருவீதியுலா வந்தார்.

கடந்த பல வருடங்களாக ஆலயத்தில் திருப்பணி இடம்பெற்று வருகின்றது. தற்போது இடம்பெற்று வரும் காம்யோற்சவத்தையொட்டி சுவாமி ஒரு தேரில் மட்டும் வீதியுலா வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சுவாமி தேரில் உலா வரும் திருக்காட்சியைத் தரிசிக்க 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அடியார்கள் கலந்து கொண்டார்கள்.

பொதுமக்களின் போக்குவரத்து நன்மை கருதி காலை முதல் (18 ஆம் பக்கம் பார்க்க)



# ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி பங்கேற்க மாட்டார்

## கொழும்பு ஊடகம் ஆரூடம்

(கொழும்பு)

எதிர்வரும் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ள மாட்டார் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (18 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பம் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

(கொழும்பு)

இன்று ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சை வினாத்தாள்கள் அனைத்தும் பரீட்சைகள் நடைபெறவுள்ள மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்று ஆரம்பமாகவுள்ள பரீட்சைக்காக 2 இலட்சத்து 68 ஆயிரத்து 924 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். (18 ஆம் பக்கம் பார்க்க)

### வாழ்த்துகிறோம்

இன்று ஆரம்பமாகும் க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் தோற்றும் சகல மாணவர்களும் பரீட்சையில் சித்தியடைந்து சாதனை படைக்க இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

வலம்புரி கல்விப் பிரிவு

## குடாநாட்டில் இன்னும் 45 நாள்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு விடும்

### யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இன்னும் 45 நாள்களுக்குள் அனைத்து நிலக் கண்ணி வெடிகளும் அகற்றப்பட்டு விடும் என்று யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த கத்துருசிங்க தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் மிகவும் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. யாழ்ப்பாணத்தின் அநேக இடங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு விட்டன.

தனங்கிளப்புப் பகுதியிலும் கண்ணிவெடிகள் அகற்றப் (18 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசுக்கு எதிராக வழக்கு ஐ.நாவில் தாக்கல் செய்ய முடிபு

### மலேசிய மாநில துணை முதல்வர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசின் தமிழினப் படுகொலை நடவடிக்கைகளுக்கு எதிராக ஐ.நா.மனித உரிமை சபையில் வழக்குத்தாக்கல் செய்கின்றமைக்குத் தேவையான நடவடிக்கைகளை மலேசியாவின் பினாங்கு மாநிலத் துணை முதல்வர் பேராசிரியர் பி.இராமசாமி முன்னெடுத்து வருகின்றார்.

அவர் இந்த நோக்கத்துக்காகச் சர்வதேச குழுவொன்றை அமைக்கவுள்ளார். இச் சர்வதேச குழுவில் மனிதாபிமான அமைப்புக்களின் பிரதிநிதிகள், (18 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுத மோதலின்போது நடந்த பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள்

### தகவல் திரட்டுகிறது ஐ.நா. விசேட குழு

(கொழும்பு)

இலங்கையில் கடந்த கால ஆயுத மோதல்களின்போது இடம்பெற்ற பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை தகவல்களைச் சேகரித்து வருகின்றது.

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியாக நியமிக்கப்பட்டு ஆயுத மோதல்களின் போதான பாலியல் வன்செயல்கள் குறித்து ஆராய்ந்து (18 ஆம் பக்கம் பார்க்க)

அபான்ஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிட்டட்டின் சேவைகள் யாழ் மக்களுக்கு, சுன்னாகம் கிளையில் 12.08.2010 முதல்

அபான்ஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிட்டட் 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்திற்கமைவாக இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் நிதிக் கம்பனியாக பதிவு செய்யப்பட்ட அபான்ஸ் குழுமத்தின் ஓர் அங்கமாகும்.


எமது சேவைகள்

★ நிலையான வைப்பு
★ சேமிப்பு வைப்பு
★ குத்தகை, வாடகைக் கொள்வனவு
★ தவணைக் கடன்
★ சொத்து வியாபாரம்
★ ஏனைய நிதிச் சேவைகள்

Abans FINANCE

தொடர்புகளுக்கு : 160 1/1 & 1/2, கே, கே, எஸ் வீதி, சுன்னாகம். தொ.பே: 021 3207686 தொ.ந: 021 224 1124

2(07)



வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் இரதோற்சவப் பெருவிழா நேற்றுபக்தி பூர்வமாக இடம்பெற்ற போது..... படங்கள் - அம்பிகை

# ஆளும் கட்சி ஆதரவாளர்களுக்கு காணிகள் வழங்கப்படுகின்றது

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

ஆளும் கட்சிக்கு விசுவாசமானவர்களுக்கு காணிகளை வழங்கும் நோக்கில் அப்பாவிகள் விரட்டியடிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மட்டக்குளி பிரதேசத்திற்கு நேற்று விஜயம் செய்த போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். மட்டக்குளி சுமத்திரபுர பிரதேச மக்கள் எதிர்நோக்கி வரும் காணிப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப் படவேண்டும்.

டெங்கு நுளம்பு கடித்து குழந்தை உயிரிழந்தால் குழந்தையின் பெற்றோர் மீது வழக்குத்தொடரும் கலாசாரமே காணப்படுகிறது. திருட்டுச் சம்பவம் குறித்து முறைப்பாடு செய்ய காவல்நிலையத்திற்கு செல்லும் அப்பாவிகள் பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ளும் அதேநேரம் திருடர்கள் எவ்வித பிரச்சினையும் இன்றி வாழ்கின்றனர்.

அப்பாவி மக்களை விரட்டியடித்து அவர்களது காணிகளை ஆளும் கட்சி ஆதரவாளர்களுக்கு வழங்கப்படும் ஓர் சூழ்நிலையே தற்போது காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

# தமிழ்நாடு விடுதியில் தங்கியிருந்த 6 ஈழத்தமிழ் இளைஞர்கள் கைது

(சென்னை)

தமிழ்நாடு விடுதியொன்றில் தங்கியிருந்த 6 இலங்கையர்களை தமிழக மாநில காவல் துறையினர் நேற்று கைது செய்துள்ளனர். சுற்றுலா பயணிகள் என கூறி இவர்கள் அங்கு சட்டவிரோதமான முறையில் தங்கியிருக்க முயற்சித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ள இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் ஆறுபேரும் நாகர் கோவிலில் உள்ள விடுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையின் வெவ்வேறு பாகங்களில் இருந்து சென்ற இவர்கள் 20மற்றும் 26 வயது கொண்டவர்கள் எனவும் கைது செய்யப்பட்டவர்களுள் மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்த ஜீவா என்பவர் கடந்த 2007 ஆம் ஆண்டு சென்னைக்கு வந்து தங்கியுள்ளார் எனவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் ஏனையவர்கள் அதன்பின்பு அங்கு சென்று தங்கியுள்ளனர். இந்தியாவுக்குள் நுழைவதற்கான ஆவணங்கள் வைத்திருந்த பொழுதிலும் இவர்கள் குறித்து தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக தமிழகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (ந-5)

# வீதிப் போக்குவரத்து மணற்காட்டில் கருத்தரங்கு

(மணற்காடு)

மணற்காடு பொலிஸ்நிலையத்தினர் நேற்றுக்காலை 7 மணிக்கு அம்பன் பாடசாலை மண்டபத்தில் வடமராட்சி கிழக்கு உழவு இயந்திர உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளுக்கான வீதிப்போக்குவரத்து தொடர்பான கருத்தரங்கு நடத்தப்பட்டது.

கருத்துரையினை மணற்காட்டு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வீரவர்த்தனவினால் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் 200 க்கு மேற்பட்ட உழவு இயந்திர உரிமையாளர்கள், சாரதிகள் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வானது, வடமராட்சி கிழக்கு மணலேற்றும் உரிமையாளர் சங்கத் தலைவர் சிவராஜா தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்புவிருந்தினராக நாகர் கோவில் பொறுப்பதிகாரியும் கலந்துகொண்டார். (ந-3,45)

# புனித அன்னம்மாள் ஆலய 160ஆவது வருட திருப்பலி

வலிகாமம் வடக்கு புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த திருவிழாத் திருப்பலி நேற்றுக்காலை 8.30 மணிக்கு நடைபெற்றது. வலிகாமம் வடக்கு அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இத் தேவாலயத்தில் நேற்று படையினரின் விஷேட அனுமதி பெற்று 160 ஆவது ஆண்டாக திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருப்பலியை அருட்தந்தை அருள்நேசன் அடிகளார் நிறைவேற்றினார்.

திருப்பலி ஒப்புக்கொடுக்கும் வழிபாட்டில் பங்குத்தந்தை ஞானேந்திரன், அருட்தந்தை அன்ரனிதாஸ், அருட்தந்தை ஜோக், அருட்தந்தை ஜெயசீலன், அருட்தந்தை சதீஸ் ஆகியோரும் கலந்துகொண்டார்கள். (ந-5)

# யாழ்ப்பாண மக்கள் மிகவும் கனிந்த உள்ளம் படைத்தவர்கள்

## ரி.ரி.குணசிங்க புகழாரம்

(கொழும்பு)

யாழ்ப்பாண மக்கள் மிகவும் கனிந்த உள்ளம் படைத்தவர்கள் என மஹிந்த கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் ரி.ரி. குணசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண நகருக்கு அருகாமையில் தனது வாகனம் விபத்துக்கு உள்ளன போது அங்கிருந்த மக்கள் காட்டிய கரிசனை ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாக தெரிவித்துள்ள அவர், நகரத்தை அண்டிய மக்கள் மிகவும் கருணை உள்ளத்துடன் வாகன விபத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்றினர். வாகன விபத்தில் காயமடைந்திருந்த நிலையில் தமது பணப்பை மற்றும் கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றை அங்கிருந்த மக்கள் பாதுகாப்பாக மீளளித்தனர்.

இதேவேளை யாழ்ப்பாண வைத்தியசாலையில் பல்வேறு குறை பாடுகள் காணப்படுகின்றன. யாழ்ப்பாண வைத்தியசாலையில் ஒரு நுளம்பு வலை கூட இருக்கவில்லை. தரை மிகவும் சமச்சீரற்ற நிலையில் காணப்படுகின்றது. இதனால் நோயாளிகள் மிகவும் சிரமங்களை எதிர்நோக்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)


# நிதிப் பற்றாக்குறை காரணமாக மீள்குடியமர்வுப் பணிகள் தாமதம்

(கொழும்பு)

வடக்குப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியமர்த்துவதற்கு தேவையான நிதி இல்லாததால் மீள் குடியமர்த்தும் பணிகள் தாமதமடைந்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான இணைப்புச் செயலகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இலங்கையின் வட பகுதியில் போரினால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்துவதில் பாரிய நிதி நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான இணைப்புச் செயலகம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியமர்த்துவதற்கு 2010 ஆம் ஆண்டுக்கு தேவைப்பட்ட நிதியில் 42.8 விகிதமே தமக்கு கிடைத்துள்ளதாகவும் இந்த வருடம் தமக்கு 290 மில்லியன் டொலர்கள் தேவை என கடந்த வருடம் ஜெனீவாவில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டபோதும் 124 மில்லியன் டொலர்களையே கொடையாளி நாடுகள் வழங்கியுள்ளதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)



31 ஆம் நாள் நினைவலைகள்...

பிறப்பு 03 02 1982

இறப்பு 10 07 2010

அமரர் மகேஸ்வரன் சுதாகர் (தீபன்)

(சிங்கர் கம்பனி ஊழியர்)

சின்னச் சிரிப்பெங்கே?
சோர்வில்லாப் பேச்செங்கே?
பாசப் பார்வையெங்கே?
பரிவோடணைக்கும் கை எங்கே?
எதுவுமே இல்லையடா – தீபா
நீயின்றி எமக்கு...
இதயமே எரியுதடா!
இன்று வருவாயோ?
நாளை வருவாயோ?
என்று வருவாய்?
எம் இதயச் சுமை நீக்க!

இல, 14.B.S. லேன்
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

மைத்துனன் அ.நித்தியானந்தன்(தம்பி)
தம்பி தேநீர்ச்சாலை
இல.18 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

(சி-432)

# இலங்கையில் 40 ஆயிரம் பாலியல் தொழிலாளர்கள்

## சுகாதார கல்விப் பிரிவு தகவல்

(கொழும்பு)

இலங்கையில் நாடு முழுவதும் சுமார் 30 ஆயிரம் தொடக்கம் 40 ஆயிரம் பேர் வரை பாலியல் தொழிலில் ஈடுபடுகின்றார்கள் என்று சுகாதார கல்விப் பணியகம் அறிவித்துள்ளது.

பணியகத்தின் ஊடக இணைப்பாளர் வைத்திய கலாநிதி சாந்த ஹெட்டிஆராய்ச்சி இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பாலியல் தொழிலில் தனி நபர்களும் ஈடுபட்டு வருகின்றனர். நிலையங்களும் இரகசியமாக இயங்குகின்றன. இதனால் துல்லியமான கணக்கெடுப்புக்களை மேற்கொள்ள முடியவில்லை.

எனினும் தேசிய பாலியல் தொற்றுநோய் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகளின்படி பாலியல் தொழிலாளர்களின் எண்ணிக்கை 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரை இருக்கலாம் என தெரியவந்துள்ளது.

தற்போது வேறு பெயரில் பல விபச்சார நிலையங்கள் செயற்படுகின்றன. அத்துடன் வாகனங்கள் மூலமும் நடமாடும் பாலியல் சேவையில் பெண்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர் என அவர் குறிப்பிட்டார். (ந-5)


**ஆனந்தி திருமண சேவை**

**மணமக்கள் தேவை**

மிருகசீரிடம், சூரியன்செவ்வாய் சேர்ந்திருப்பது, 1974 இல் பிறந்த, அரசபணி புரியும் 47 வரை கிரகபாவம்: உயரம் 5 அடி 5 அங்குலம் மெல்லிய சிவலை நிறப் பெண்மணிக்கு (9ல் செவ்வாய்) அரசில் பணியாற்றும் மணமகனை விரும்புகின்றோம். சகோதரர் (இரட்டைப்பிறவிகள்) பட்டதாரி ஆசிரியராவார். மாற்றுச்சம்பந்தமும் கவனத்தில் கொள்ளப்படும். சோதிடர் V.A. சிவராசா, 56, அம்மன் றோட் கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும், முகவரிக்கு நேரடியாக தபால், தொலைபேசி : 021 222 8708 மூலம் தொடர்புகொள்ளுங்கள். (2114)



22.07.2010 முதல்

ஸ்ரீகாந், பிருத்விராஜ், கமாலினி முகர்ஜி மற்றும் பலர் நடிப்பில்



குற்றப்பிரிவு

செல்லா சினிமா (நாதன்ஸ்)

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00

(C-588)


# நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் மானுடவியல் பேராசிரியர் நந்தசேன ரத்னபாலவின் மூன்றாவது நினைவுப் பேருரை இன்று மாலை 5 மணிக்கு கொழும்பு நகரோதய மண்டபத்தில் இடம்பெறும்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக துணைவேந்தர் கலாநிதி என்.எல்.ஏ.கருணரத்ன "சமூக விஞ்ஞானக் கோட்பாடுகளை பண்பாட்டு மயமாக்கல்" என்ற பொருளில் கருத்துரை வழங்குவார்.

பேராசிரியர் ரத்னபாலாவின் இரண்டாவது நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

# இன்று ஒரு தகவல்

## அதிசய மோசடி

அமெரிக்க வியாபாரி ஒருத்தர் ஒரு நாள் பத்திரிகையை புரட்டிக் கொண்டிருந்தார். அதில் ஒரு விளம்பரமொன்று அவரது கண்ணில் பட்டது.

அது என்னவென்றால் பரீசிலுள்ள ஈபிள் டவர் இருக்கிறதல்லவா ... அந்த உயரமான கோபுரம் ஏலத்துக்கு வருகிறது. என்ற விளம்பரம்தான் அது.

அப்படியானால் அதை ஏலத்தில் எடுத்து...பிரித்து விற்று விட்டோமானால் நல்ல இலாபம் கிடைக்கும்மே என்று நினைத்தார். உடனே விளம்பரம் கொடுத்தது யார் என்று விசாரித்தார்.

அவருடன் தொடர்பு கொண்டார். அவர் உடனே புறப்பட்டு வருகிறேன் என்றார்.

சிறிது நேரத்தில் ஆடம்பரமான கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய அவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

"எனது பெயர் ஸ்டான்லிலோ" என்றார். "பரீஸ் நகர அதிகாரிகளில் ஒருத்தர் நான்" என்றான்.

"வாருங்கள் அந்த டவரைப்பார்க்கலாம்" என்றார். இரண்டு பேரும் போய்ப் பார்த்தார்கள். "உங்களுடைய மதிப்பு என்ன?" என்றார் இவர் "உட்கார்ந்து பேசலாம் வாருங்கள்" என்றார் அவர்.

ஒரு ஹோட்டலுக்குப் போய் உட்கார்ந்து பேசினார்கள்.

"இதோ பாருங்க... இந்த ஈபிள் டவர் ஓர் உலக அதிசயம். இருந்தாலும் இரண்டாவது உலகப்போர்க்காலத்தில் மிகவும் சேதமடைந்து விட்டது.

அதனால் தான் இதைத் துண்டு துண்டாகக் கழற்றி விற்று விடலாம் என்று பிரான்ஸ் அரசாங்கம் முடிவு செய்து விட்டது. அது தொடர்பான அதிகாரி தான் நான். அரசாங்கம் சார்பாக இதை விலை பேசி விற்கவேண்டிய பொறுப்பு எனக்கு" என்றார்.

இரண்டு பேரும் கடைசியாக 25 ஆயிரம் டொலர் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

இவர் பணத்தைக் கொடுக்க அவர் அதை வாங்கிக் கொண்டார். அரச முத்திரையுடன் பத்திரம் எழுதி அந்த பரீஸ் நகர ஈபிள் கோபுரத்தை வியாபாரியின் பெயருக்கு மாற்றம் செய்து கொடுத்து விட்டு அவர் புறப்பட்டார்.

மறுநாள் இந்த வியாபாரி ஆட்களை எல்லாம் அழைத்துக் கொண்டு கோபுரத்துக்கு வந்து கழற்ற ஆரம்பித்தார்.

அப்பொழுது தான் யாரோ வந்து கழுத்தைப் பிடித்தார்கள். யார் என்று திரும்பிப் பார்த்தால் பொலிஸார். "என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்கள்.

''கோபுரத்தை பார்ட் பார்ட்டாக கழற்றிக் கொண்டிருக்கின்றேன்'' என்றார். ''முதலில் உன்னை பார்ட் பார்ட்டாக கழற்றிவிடுவோம்'' என்றார்கள்.

''இந்தக் கோபுரத்தை நான் விலைக்கு வாங்கியிருக்கிறேன்'' என்று பத்திரத்தை எடுத்துக் காட்டினார்.

அதை விற்றவருக்கும் அரசாங்கத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை அவருக்குப் புரிய வைப்பதற்குள் அவர்களுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது.

"நாம் நன்றாக ஏமாந்து விட்டோம்" என்பது அந்த ஆளுக்கு கடைசியாகத்தான் விளங்கியது.

"ஐயோ ஏமாந்து விட்டேனே" என்று அலற ஆரம்பித்தார்.

பரீஸ் பொலிஸ் மிகவும் தீவிரமாகத் தேட ஆரம்பித்து ஆளைக்கண்டு பிடித்து விட்டார்கள்.

அந்த ஆளுக்கு ஒன்பதாண்டு சிறைத்தண்டனை கிடைத்தது.

அதற்குப்பின்னர் தான் தெரிந்தது... அந்த ஆள் ஏற்கனவே பலரை ஏமாற்றி இருக்கிறான். என்பது.

ஐம்பது வயதுக்குள் 16 வருடம் சிறையிலும் இருந்திருக்கின்றான்.

ஈபிள் டவரை விற்பதற்கு முன்பே லண்டனில் புகழ்பெற்ற சென்போல் சேர்ச்சை ஒரு ஜப்பானிய பணக்காரருக்கு விற்றிருக்கிறானாம் இதே ஆள்.

சிறையிலிருந்ததற்கு பின்னரும் அவன் திருந்தவில்லையாம்.

பத்திரிகை நிருபர்களெல்லாம் சூழ்ந்து கொண்டு ''என்ன இப்படிச் செய்து விட்டீர்களே..." என்று கேட்போது, "நான் சும்மா ரோட்டில் நடந்து போனால் கூட பணக்காரர்கள் தானாக வந்து என்னிடம் ஏமாந்து போகிறார்களே... அதற்கு நான் என்ன செய்வது?" என்றானாம்.


அப்பொழுது அவன் கொடுத்த பேட்டி உலகம் முழுவதும் மிகவும் பிரபலமாம். 50 வயதுக்குப் பின் அந்த ஆள் ஏமாற்று வேலை எல்லாம் விட்டுவிட்டு உட்கார்ந்த இடத்திலேயே வாழ்க்கையை அனுபவித்து விட்டு போய்ச் சேர்ந்தானாம்.

உலகத்தில் எப்படியெல்லாம் நடக்கிறது. பாருங்கள் நம் ஊரில் கூட ஒரு கதை சொல்லுவார்கள் புத்தி சுவாதீனம் இல்லாத 2 பேர் பேசிக் கொண்டிருந்தார்களாம் அதில் ஒருத்தன்,

"நான் தஞ்சாவூர் பெரிய கோயிலை விலைக்கு வாங்கலாம் என்று இருக்கிறேன்" என்றானாம். உடனே இன்னொருத்தன் கொஞ்சம் யோசித்து விட்டு, ''அதை நான் விற்பதாக இல்லையே" என்றானாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க்கந்தனின் மஹோற்சவம் 15 ஆம் திகதி ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகவுள்ளது.

இம்மஹோற்ச வத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு மஞ்சத் திருவிழாவும், 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு கார்த்திகை திருவிழாவும், 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு சந்தான கோபாலர் திருவிழாவும் மாலை 5 மணிக்கு கைலாச வாகன திருவிழாவும் இடம் பெறவுள்ளது.

4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு கஜவல்லி மஹாவல்லி திருவிழாவும், மாலை 5 மணிக்கு வேல்விமான திருவிழாவும், 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு தண்டாயுதபாணி திருவிழாவும், மாலை 5 மணிக்கு ஒரு முகத் திருவிழாவும், 6 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு சப்பறமும், 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு இரதோற்சவமும் 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவமும், 9 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு வைரவர் பொங்கல் உற்சவமும் இடம்பெறவுள்ளது. (6)

# விவசாய சிறுகைத்தொழில் முயற்சிக்கடன் வழங்க மத்திய வங்கி நடவடிக்கை

வறுமை ஒழிப்புக் கடன் திட்டத்தின் கீழ் ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் விவசாயம் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சிக் கடன்கள் வழங்குவதற்கு மத்திய வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஏற்ற வகையில், நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன.

மத்திய வங்கியின் உதவி ஆளுநர் எம். கருணாரத்னவின் வழிபடுத்தலில் திட்டக்குழு மதிப்பீட்டுக் குழு ஆகியன வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வருகின்றன.

வறுமை ஒழிப்புக் கடன் திட்ட சிறு குழுவில் யாழ். மாவட்டத்தில் 12 ஆயிரம் குழுக்கள் இணைந்துள்ளதாக மத்திய வங்கியின் வறுமை ஒழிப்புக் கடன் திட்ட குழுவின் இணைப்பாளர் எஸ்.ஸ்ரீபத்மநாதன் தெரிவித்துள்ளார். (6-2)

# இராசி பலன்

*09.08.2010*
*(ஆடி 24, திங்கட்கிழமை)*
*சதுர்த்தசி முற்பகல் 11.30 மணிவரை*
*பூசம் முன்னிரவு 10.29 மணிவரை*
*இராகுகாலம் 7.34-9.04 மணிவரை*
*சுபநேரம் 12.04-1.34 மணிவரை*
*ஆடி அமாவாசை விரதம்.*

**மேடம்** பெற்றோரின் ஆதரவால் பெருமை கூடும் நாள், உறவினர்களின் வருகையுண்டு, விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் தோன்றும், வெளித் தொடர்புகள் ஏற்படலாம்.

**இடபம்** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு கிட்டும், நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், தன்னம்பிக்கையுடன் பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள்.

**மிதுனம்** வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், விசேட நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு.

**கடகம்** பயணத்தால் பலன் கிடைக்கும், எப்படி நடக்குமோ என்ற காரியம் நல்ல விதமாக நடைபெறும், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், விருந்தினர் வருகையுண்டு.

**சிங்கம்** பிறரது பொறுப்புக்களால் மனப்பதட்டமும் செலவுகளும் ஏற்படலாம், மகிழ்ச்சி தரும் பயணம் ஒன்று உருவாகலாம், நண்பர்கள் மூலம் சந்தோசம் காண வேண்டிய நாள்.

**கன்னி** தொழில்மூலமாக அதிகலாபம் கிடைக்கலாம், விருந்தினர் வருகையால் வியப்படைய வேண்டிய நாள், எடுத்த காரியம் கைகூடும், வருங்கால நலனுக்கு புதிய திட்டம் ஒன்றை தீட்டுவீர்கள்.

**துலாம்** தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவி செய்யும் நாள், கொடுக்கல் வாங்கல்களில் கணிசமான தொகை வந்து சேரும், வீடு கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** தடைப்பட்ட சில காரியங்கள் துரித கதியில் நடைபெறலாம், மதிப்பும் மரியாதையும் உயரும், விழாக்களில் கலந்து கொண்டு சிறப்படையும் நாள்.

**தனுசு** திடீர் செலவுகளைச் சமாளிக்க பிறரிடம் கைமாற்று கோரும் நாள், தொழிலில் பரிகாரருடன் சில கருத்து முரண்பாடுகள் ஏற்படலாம்.


**மகரம்** நினைத்த காரியம் நிறைவேறும் நாள், விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**கும்பம்** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவார்கள், தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாய் வாழ்வீர்கள்.

**மீனம்** சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் அதிகரிக்கும், இல்லத்தில் நல்ல சம்பவம் ஒன்று நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், புத்திரர் வழியில் சில செலவுகள் ஏற்படலாம்.

வளவன்

# பேசும் படம்




வைபவங்களில் வாழை கட்டுவது எமது உணவுக்குத் தான்...

காட்சி-யாழ்ப்பாணம்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 110 |
| தக்காளி | 70 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 |
| கோவா | 70 | 70 | 70 |
| கரட் | 120 | 120 | 120 |
| பூசணி | 50 | 50 | 40 |
| புடோல் | 40 | 50 | 30 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 120 | 130 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 | 60 |
| பயற்றங்காய் | 200 | 160 | 120 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 80 | 120 | 60 |
| முருங்கைக்காய் | 60 | 140 | 100 |
| போஞ்சி | 120 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 20-25 | 20 | 15 |
| தேசிக்காய் | 80 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 25 |









யாழ்.பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள 13 ஞானக்குழந்தை இல்ல பாலர் பாட சாலைகளுக்கிடையிலான 44 ஆவது விளையாட்டு விழா நேற்று யாழ்.இந்து கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பாலர் கல்விக்கழக தலைவரும் யாழ்.பரியோவான் கல்லூரி ஆசிரியருமான எஸ்.பி.காசிநாதன், வலயக்கல்வித் திணைக்கள முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன், ஈ.எஸ்.பி நிறுவன உரிமையாளர் ஈ.எஸ்.பி நாகரத்தினம் ஆகியோர் உரையாற்றுவதையும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## கைதடி சித்த போதனா வைத்தியசாலையில்
# கொரிய அக்குபஞ்சர் சிகிச்சை
## வாரத்தில் 4 நாட்கள் இடம்பெறுகின்றன

(யாழ்ப்பாணம்)

கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் தற்போது கொரிய அக்குபஞ்சர் சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாக வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி பிரேமா சிவன் சண்முகராஜா தெரிவித்தார்.

கைதடி சித்த போதனா வைத்தியசாலை நடவடிக்கைகள் தொடர்பில் அவர் மேலும் தகவல் தருகையில்,

கைதடி சித்தபோதனா வைத்தியசாலையில் நான்கு மருத்துவர்களினால் கொரிய அக்குப்பஞ்சர் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம் மருத்துவர்கள் கொரிய அக்குபஞ்சர் வைத்திய நிபுணர்களினால் வழங்கப்பட்ட 10 மாதகால பயிற்சிகளை பூர்த்தி செய்துள்ளனர்.

இதில் வைத்தியகலாநிதி ரி.செல்வராஜா செவ்வாய்க்கிழமைகளிலும் வைத்திய கலாநிதி ரி.ஜெயசங்கர் புதன் கிழமைகளிலும் வைத்தியகலாநிதி ஆர்.பூபதீஸ்வரி வியாழக் கிழமைகளிலும் வைத்திய கலாநிதி ஜெபநாம கணேஷ் வெள்ளிக்கிழமைகளிலும் அக்குபஞ்சர் சிகிச்சையை வழங்குகின்றனர்.

இச்சிகிச்சை முறைக்கு அதிக வரவேற்பு என்பது நாளுக்கு நாள் அதிகரிக்கும் இச் சினிச்சையைப் பெறும் நோயாளர்களின் எண்ணிக்கையின் மூலம் தெரிகின்றது.

அத்துடன் இங்கு திங்கட்கிழமைகளில் பெண் நோயியல் சிகிச்சையும் புதன்கிழமைகளில் நீரிழிவு (மதுமோகம்) சிகிச்சையும் வியாழக்கிழமைகளில் குழந்தை மருத்து (பாலரோகம்) சிகிச்சைகளும் வெள்ளிக் கிழமைகளில் சிறப்பு மருத்துவ (யோக, உளவியல்,முறிவு,நெரிவு உட்பட) சிகிச்சைகளும் வழங்கப்படுகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார். (5)




# சிறுதொழில் கொடுப்பனவுக்கு தெரிவுசெய்யப்பட்டோர் விபரம்

(சாவகச்சேரி)

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு இயங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் , மிருகவளர்ப்பு, வியாபார நிலையம் அமைத்தல், தையல்வேலை மற்றும் கோழி வளர்ப்பு ஆகிய சிறுதொழில் கொடுப்பனவுகளுக்கு விண்ணப்பித்தவர்கள் இன்று திங்கட்கிழமை தமது குடும்ப பங்கீட்டு அட்டை, ஆள் அடையாளஅட்டை ஆகியவற்றுடன் தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்கு சமு கமளிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். தெரிவுசெய்யப்பட்டோரின் பெயர் விபரம் வருமாறு ,

திருமதி எஸ்.தயாணந்தலதா (கொடிகாமம், ஆர்.சரஸ்வதி (நாவற்குழி), ஈஸ்வரி சிவராசா (கொடிகாமம்), ஸ்ரீதரன் விஜயகுமாரி (சாவகச்சேரி), தயாக்கிளி செல்வக்குமார் (சாவகச்சேரி), தெய்வமலர் தயாளன் (கைதடி), மங்களாம்பிகை வசந்தசர்மா (கல்வயல்) , சங்கீதமலர் திருநடராசா (வரணி), வர்மலன் சிவரஜனி (கல்வயல்), இராசகுலசிங்கம் ஜெயரஞ்சி (கொடிகாமம்) ஆகியோர் பெறவுள்ளனர் (2-29)

# ஆடிப்பூர உற்சவம்

(நவாலி)

நவாலி களையோடை கண்ணை அம்பாள் ஆலய ஆடிப்பூர உற்சவம எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனை நடைபெற்று மதியம் மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது.

அன்றிரவு 8 மணிக்கு வசந்த மண்ட பூசை நடைபெற்று, யாழ்.மாவட்டத்தில் தலை சிறந்த தவில் வித்துவக் கலைஞர்களின் நாதஸ்வரக் கச்சேரியுடன் அம்மன் வீதி உலா வலம் வருதலும் நடைபெறவுள்ளது. (6-2)

# செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலய பாடசாலைகளில் தரம் 3இல் கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்களுக்குமான இரண்டாம் மொழியான சிங்கள மொழி பாட செயலமர்வு எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை யா/புலோலி மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறுமென வடமராட்சி வலயப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார். (6-2-19)

★ ★ ★

(அல்வாய்)

வடமராட்சி வலயபாடசாலைகளில் புதிதாக நியமனம் பெற்ற அதிபர்களுக்கான செயலமர்வும்; இப்பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் சித்திரப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமான செயலமர்வு எதிர் வரும் 16 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை யா/புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறுமென்று வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (6-2-19)

# வியாபார நிலையங்களை பதிவு செய்ய கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குள் வர்த்தக நிலையங்களை நடாத்தும் வர்த்தகர்கள் கைத்தொழில் வணிகர் மன்றத்தில் தம்மை அங்கத்தவர்களாக பதிவு செய்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பதிவினை மேற்கொள்ளாத வர்த்தக நிலையங்கள் வியர்பார நடவடிக்கையில் ஈடுபட முடியாது என வணிக மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற வருடாந்த கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (6-2-29)

# ஆடி அமாவாசை கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் வழக்கம்பரை சிவபூமி முதி யோர் இல்லத்தில் ஆடி அமாவாசை கலை நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தலைவர் ஆறு.திருமுருகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனின் ஒழுங்கமைப்பில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவர்களின் நாட்டிய நாடகமும் மல்லாகம் மகா வித்தியாலய மாணவர்களின் நடனமும் அளவெட்டி அ.மி.த.க. பாடசாலை மாணவர்களின் நாடகமும் நடைபெறவுள்ளன. (6)

# அரியாலை சனசமூக நிலையத்தினால் மரதன்,சைக்கிளோட்டப் போட்டிகள்

(கொழும்புத்துறை)

அரியாலை சனசமூக நிலையத்தின் 61 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண வீரர்களுக்கு மகுடம் சூட்டுவதற்கான மரதன் ஓட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் ஆண்களுக்கு 10 மைல் மரதன்ஓட்டமும், 25மைல் சைக்கிளோட்டமும், பெண்களுக்கு 15மைல் சைக்கிளோட்டமும் நடைபெறவுள்ளனர்.

மேற்படி போட்டிகளில் பங்கு கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னராக அரியாலை சனசமூக நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (6-2-51)

# யாழ். மாவட்டத்தில் 36 மருத்துவர்கள் அக்குபஞ்சர் மருத்துவப் பயிற்சி முடித்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 36 மருத்துவர்கள் கொரிய அக்குபஞ்சர் மருத்துவ சிகிச்சைப் பயிற்சியைப் பூர்த்தி செய்துள்ளனர்.

இம்மருத்துவ சிகிச்சை தொடர்பில் கொரிய நாட்டின் 2 அக்குபஞ்சர் மருத்துவர்கள் 10 மாத காலப் பயிற்சிகளை யாழ்ப்பாணத்தில் நடாத்தினார்கள்.

பயிற்சியை முடித்த 36 மருத்துவர்களில் கைதடி சித்த போதனா வைத்தியசாலையின் 4 மருத்துவர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கொரிய அக்குபஞ்சர் சிகிச்சைக்கான வைத்தியசாலை இலங்கை அரசின் அனுமதியுடன் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இங்கு கொரிய நாட்டின் அக்குபஞ்சர் வைத்திய நிபுணர்கள் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

# யாழ்ப்பாண சர்வோதயத்தின் புதிய நிர்வாகம் ஏமாற்றிவிட்டதாக அரச அதிபருக்கு முறையீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சர்வோதய அமைப்பில் மிதிவெடி அபாய விழிப்புணர்வு கல்வித்திட்டத்தில் பணியாற்றிய 7பேர் சர்வோதயத்தின் புதிய நிர்வாகத்தின் நேர்மையினத்தால் தாம் தொழில் இழந்ததாக தெரிவித்து யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் முறையீடு செய்துள்ளனர்.

அவர்கள் அரச அதிபருக்கு செய்துள்ள முறையீட்டில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் சர்வோதய நிறுவனமானது மிதிவெடி அபாய விழிப்புணர்வுக் கல்வித் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. இப்பணியில் நாங்கள் பல வருடங்களாகப் பணியாற்றி வந்துள்ளோம். வருடம் தோறும் இடம்பெறும் மீள் நியமனத்திற்காக இம்முறையும் நாம் விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றியிருந்தோம்.

எனினும் எமது அனுபவம் மற்றும் மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் நாம் ஆற்றிய சேவை என்பனவற்றைப் புறம்தள்ளிய யாழ்ப்பாண சர்வவோதயத்தின் புதிய நிர்வாகம் எங்களை வெளியேற்றி விட்டு தங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு நியமனம் வழங்கியுள்ளது. நேர்முகப் பரீட்சைக்கு 50 க்கும் மேற்பட்டோர் தோற்றியிருந்த போதிலும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாதவருக்குக் கூட இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு மாத காலம் சம்பளம் இன்றி பணியாற்றினால் அடுத்த வேலைத் திட்டத்தில் எமக்கு நியமனம் தரப்படுமென மிதிவெடி அபாயக் கல்வித் திட்ட இணைப்பாளர் கூறியமைக்கு அமைய தொண்டு அடிப்படையில் நாம் பணியாற்றியிருந்தோம் .எனினும் எமது பணி கவனத்தில் எடுக்கப்படாமல் புறந்தள்ளப்பட்டுள்ளது.

செல்வாக்குக் கலாசாரமும் முன்னைய நிர்வாகத்தைப் பழிவாங்கும் நோக்கமும் நாம் தொல்லை இழந்து நடுத்தெருவில் நிற்பதற்குக் காரணமாகும். மிதிவெடி அபாயக் கல்வித் திட்டத்தில் பொறுப்புடன் நீண்ட காலம் செயற்பட்ட எமக்கு மீள் நியமனம் வழங்கப்படும் என புதிய மாவட்ட இணைப் பாளரால் வாய்மொழி மூல உத்தரவாதம் தரப்பட்டிருந்தது. அந்த நம்பிக்கையோடு இருந்த எம்மை யாழ்ப்பாண சர்வவோதயத்தின் நிர்வாகம் ஏமாற்றி நம்பிக்கை மோசடி செய்துள்ளது.

இது விடயத்தில் சர்வோதயத்தின் மிதிவெடி அபாயக் கல்வித் திட்ட இணைப்பாளரினதும் சர்வவோதயத்தின் புதிய மாவட்ட இணைப்பாளரதும் திட்டமிட்ட செயற்பாடே எமது பணி இழப்பிற்குக் காரணம் என நாம் கருதுகின்றோம்.

தொண்டு நிறுவனமாக இயங்கும் இந்த அமைப்பின் மிக மோசமான மனித உரிமை மீறல் தொடர்பில் தாங்கள் விசாரணை மேற்கொண்டு பாதிக்கப்பட்டுள்ள எமக்கு நீதியைப் பெற்றுத்தருமாறு தங்களை கேட்டு நிற்கின்றோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## சிறைச்சாலைக்குள் கஞ்சாவைக் கொண்டுசெல்ல முயன்றவர் கைது

(கொழும்பு)

மாத்தறை சிறைச்சாலை அதிகாரியொருவர் சிறைச்சாலைக்குள் கஞ்சாவைக் கொண்டு செல்ல முற்பட்ட சமயத்தில் மாத்தறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இவர் 9 கிராம் நிறையுடைய கஞ்சாவை வெற்றிலைக்குள் மறைத்து வைத்து சிறைச்சாலைக்குள் கொண்டு செல்ல முயற்சித்த வேளையிலே இச்சம்பவம் நடைபெற்றது.

மேலதிக விசாரணைக்காக குறித்த நபர் மாத்தறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (6-2)

## வன்னிக்கு இடமாற்றப்பட்ட ஆசிரியர்கள் மேன்முறையீடு செய்வதற்கு அவகாசம்

(கொழும்பு)

வன்னிப்பகுதிக்கு மூன்று வருட கால சேவை அடிப்படையில், பதிலீட்டு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களில் வெளி மாவட்ட சேவை, பின் தங்கிய பிரதேச சேவை ஆகியவற்றை பூர்த்தி செய்தவர்கள் மற்றும் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், பாரிய நோய்த் தாக்கத்திற்கு உட்பட்டோர் மேன்முறையீடு செய்யலாம் என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

இவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்களுடன் மேன்முறையீடு செய்தல் வேண்டும் என்று வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக அவர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். (6-2)

## அரசின் யோசனைகளை வெளிப்படுத்துமாறு ஐக்கிய தேசியக்கட்சி கோரியுள்ளது

(கொழும்பு)

அரசமைப்புத் திருத்தங்கள் ,17ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் அமுலாக்கம் ஆகியன சம்பந்தப்பட்ட அரசின் யோசனைகளை உடன் வெளிப்படுத்த வேண்டும் என்று ஐ.தே.க. கோரியுள்ளது.

அரசு இவற்றை வெளிப்படுத்தும் பட்சத்தில். தொடர்ந்தும் பேச்சுக்களில் ஈடுபடுவது குறித்து சாதகமாக பரிசிலிக்க முடியும் என்றும் அக்கட்சி அறிவித்துள்ளது.

அரசு பேசிக்கொண்டிருக்கிறதே ஒழிய இந்த யோசனைகளைப் பகிரங்கப்படுத்துவதாக இல்லை என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரபா கணேசன் , பீ.திகாம்பரம் ஆகியோர் அரசுடன் சேர்க்கப்பட்டமையை அடுத்து வருங்காலத்தில் அரசுடன் பேச்சுக்களில் ஈடுபடுவதில்லை என ஐ.தேக.நேற்றுமுன் தினம் அறிவித்திருந்தது. (6-2)

## என்னைக் கட்சியில் இருந்து இடைநிறுத்த முடியாது

### பிரபாகணேசன் தெரிவிப்பு

என்னை ஜனநாயக மக்கள் முன்னணியில் இருந்து இடை நிறுத்துகின்றமைக்கு மனோகணேசனுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. இவ்வாறு பிரபா கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

அரசுடன் இணைந்து கொண்டமை குறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கி இருந்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ஜனநாயக மக்கள் முன்னணியில் இருந்து உங்களை இடைநிறுத்தி உள்ளார்கள் என்று கட்சித் தலைவர் மனோ கணேசன் அறிவித்துள்ளாரென வினா வியதற்குத்தான் அவர் இவ்வாறு பதில் தந்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு,

நான் கட்சியை ஆரம்பித்து வைத்த ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவன் என்றும் கட்சியை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு.

எனவே மனோவின் நடவடிக்கை ஏற்றுக் கொள்ள முடியாதது . இதற்கு எதிராக எந்தெந்த வகையில் எல்லாம் நடவடிக்கை எடுக்க முடியுமோ அந்தந்த வகையில் எல்லாம் நடவடிக்கை எடுத்தே தீருவேன் என்று கூறினார். (6-2)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



உரும்பிராய் மேற்கில் மேல் மாடியாக எழுந்து நிற்கும் வைத்தீஸ்வரா சனசமூக நிலையத்தினை கட்டுவதற்கும் தற்போது எமது நிலையத்தின் அபிவிருத்தி வேலைகளை செய்வதற்கும் பணமாக 70000/= ரூபாவை தந்து உதவிய ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் தலைவரும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான **மாண்பு மிகு கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களையும் மற்றும் எமது கோப்பாய் தொகுதி அமைப்பாளர் **ஜங்கரன்** அவர்களையும் மற்றும் தோழர்கள் அனைவரையும் எமது நிலையம் சார்பாகவும் மக்கள் சார்பாகவும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**வைத்தீஸ்வரா ச.ச.நிலையம்**
**உரும்பிராய் மேற்கு,**
**உரும்பிராய்.**

(2115)


## கடவுச்சீட்டின் இறுதிப்பக்கத்திலுள்ள விபரங்கள் பூரணப்படுத்தப்படாவிடத்து பயண அனுமதியில்லை

### குடிவரவு- குடியகல்வு திணைக்களம் அறிவிப்பு

கடவுச்சீட்டின் இறுதிப் பக்கத்திலுள்ள விபரங்களை அதன் உரிமையாளர் பூரணப்படுத்த வேண்டியது கட்டாயமாக்கப் பட்டுள்ளது. இதன் முன்னர் இந்த நடைமுறை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கடவுச் சீட்டுக்களில் அதன் உரிமையாளர் பூரணப்படுத்த வேண்டிய பகுதி தொடர்பாக இதுவரை காலமும் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என குடிவரவு–குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஜீ.எல்.எஸ்.சேனாதீர தெரிவித்துள்ளார்.

அவசர தேவைகளின் போது தகவல்களை வழங்குவதற்கான விபரங்களைப் பூரணப்படுத்த வேண்டியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடவுச் சீட்டின் உரிமையாளர் ஏதேனும் விபத்தில் சிக்கினால் அது தொடர்பாக உரியவர்களுக்கு அறிவிப்பதற்கும் இந்த விபரங்கள் உதவும் என அவர் தெரிவித்துள்ளார். இந்தப் பகுதி பூரணப்படுத்தப்பட்டிருந்தால் கடவுச் சீட்டுக்களை வேறு நபர்கள் தவறாகப் பயன்படுத்துவதை தடுக்கமுடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

கடவுச் சீட்டுக்களின் இறுதிப்பக்கத்திலுள்ள விபரங்கள் பூரணப்படுத்தப்படாவிட்டால் பயணங்களை மேற்கொள்வதற்கு முன்னர் அதனை நிரப்புமாறு குடிவரவு–குடியகல்வுஅதிகாரிகள் ஆலோசனை வழங்குவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பயணங்கள் மேற்கொள்வதில் அநாவசிய தாமதங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளதாகவும் குடிவரவு-குடியகல்வு கட்டுப்பாட்டாளர் குறிப்பிட்டார். கடவுச்சீட்டின் இறுதிப்பக்கத்தில் உள்ள விபரங்கள் பூரணப்படுத்தப்படாமல் இருந்தால் பயணத்தை மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார். (6)





யாழ். பல்கலைக் கழகத்தில் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற டெங்கு ஒழிப்பு தொடர்பான சிரமதான பணியில் கலைப்பீட மாணவர்கள் மற்றும் மாணவிகள் கலந்துகொண்டு சிரமதானப் பணியில் ஈடுபடுவதனை படங்களில் காணலாம்



காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலய நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மலர் மாலையிட்டு அழைத்து வரப்படுவதையும், சிறப்பு விருந்தினர் இ.சுந்தரதாஸன் நிறுவுனர் சிலைக்கு மலர் மாலை அணிவிப்பதையும், வித்தியாலய அதிபர் பொ.சிவானந்தராஜா தலைமையுரையாற்றுவதையும், பண்டிதை செல்வி. யோகா.சோமசுந்தரம் நினைவுப் பேருரையாற்றுவதையும், சிறப்பு விருந்தினர் இ.சுந்தரதாஸன் மற்றும் பிரதம விருந்தினர் அ. சிவசோதி ஆகியோர் சிறப்புரையாற்றுவதையும், பிரதம விருந்தினர்களிற்கு ஆசிரியர் கழகம் நினைவுப் பரிசு வழங்குவதனையும், திறமையாக வெற்றியீட்டிய மாணவன் ஒருவனுக்கு திருமதி புஸ்பதேவி சிவசோதி பரிசில் வழங்குவதனையும், கலைநிகழ்வுகளையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- காரைநகர் செய்தியாளர்)

## திருமணத்தின் பின் வெளிநாடு செல்வதாக கூறி பணமோசடியில் ஈடுபட்டவர் கைது

(கொழும்பு)

திருமணத்தின் பின் அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்வதற்கு விசா பெற்றுக் கொள்வதற்கான செலவீனங்களுக்காக ஒரு மில்லியன் ரூபா பணம் தேவைப்படுவதாகக் கூறி தான் திருமணம் முடிக்கவிருந்த ஆசிரியை ஒருவரிடமிருந்து பணமோசடி செய்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டு மாறவிலப் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

உள்ளூர் பத்திரிகையொன்றில் வெளிவந்த திருமண விளம்பரத்திற்கு பதிலளித்த சந்தேக நபர் குறித்த ஆசிரியை மீது அக்கறை காட்டினார். இந்நிலையிலேயே திருமணத்தின் பின் வெளிநாடு செல்வதற்கு பணம் தேவைப்படுவதாகக் கூறி குறித்த ஆசிரியையை சந்தேக நபர் நம்பச் செய்துள்ளார்.

இந்நிலையில் வங்கியில் வைத்துசந்தேக நபருக்கு குறித்த ஆசிரியை பணம் கையளித்திருந்த நிலையில் அந்தப் பணம் பரிமாற்றம் வங்கியில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமராக்களில் பதிவாகியுள்ளது.

சந்தேக நபர் இன்னும் 6 இலட்சம் ரூபா பணம் மற்றும் குறித்த ஆசிரியையினது காரையும் தருமாறு கேட்டிருந்தார். இந் நிலையில் கார் மீண்டும் திருப்பி வழங்கப்படாததை அடுத்து சந்தேகம் கொண்ட ஆசிரியை இது தொடர்பில் வெளிநாட்டிலுள்ள தனது சகோதரருக்கு அறிவித்துள்ளார்.

இதனைக் கேள்விப்பட்ட குறித்த ஆசிரியையினது சகோதரர் இலங்கைக்கு திரும்பி வந்திருந்த நிலையில் சந்தேக நபரது ஊழல் விடயங்கள் தொடர்பில் கண்டுபிடித்திருந்ததுடன் ஊழல் விசாரணைக்குழுவிடமும் அறிவித்தார்.

இதனையடுத்து மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த சந்தேக நபர் 3 பிள்ளைகளின் தந்தை எனவும் தெரியவந்துள்ளது.

இவ்வாறு ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் தனது தொழில் எனவும் தன்னை கைது செய்த அதிகாரிகளிடம் சந்தேக நபர் தெரிவித்தார்.

பொலிஸார் மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6-2)

## இலங்கை அகதிகளின் கப்பல் தொடர்பில் அமெ.தமிழர்கள் அறிந்துள்ளனர்

### இணையத்தளம் சுட்டிக்காட்டு

கனடா நோக்கிச் செல்கின்ற இலங்கை அகதிகளுடனான படகு தொடர்பிலான தகவல்களைத் தெரிவித்த அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தமிழர்கள் மறுப்புத் தெரிவிப்பதாக அமெரிக்க இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில் தமது பெயரைக் குறிப்பிட விரும்பாத இலங்கைத் தமிழர் ஒருவர் அந்தக் கப்பல் குறித்து தகவல் அறிந்திருப் பதாகவும் எனினும் தமது உறவினர் எவரும் இல்லை எனத் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை அதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களே வந்தாலும் ஒருவரும் அதனை உறுதிப்படுத்தமாட்டார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் போது அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் பிலிப் ஜே கிரௌலியிடம் குறித்த இந்தக் கப்பல் தொடர்பில் பல்வேறு கேள்விகள் முன்வைக்கப்பட்டன.

இதன்போது தகவல் தெரிவித்த கிரௌலி, எம்வீசன் சீ என்ற இந்தக் கப்பல் அமெரிக்க அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கப்பல் தற்போது கனடாவின் வன்கூவர் பகுதியை நோக்கிச் செல்வதாகவும் சரியான தருணத்தின் போது இந்தக் கப்பல் தொடர்பில் தாம் நடவடிக்கை எடுக்கவிருப் பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6-2)

## சப்ரகமுவ மாகாண சபை ஆளுநரின் வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது

குருகொடை பகுதியில் சப்ரகமுவ மாகாண சபை ஆளுநர் டபிள்யூ ஜே.எம். லொக்குபண்டாரவின் உத்தியோகப்பூர்வ வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றதாக ஹொரனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் விபத்தில் சப்ரகமுவ மாகாண சபை ஆளுநரின் பாதுகாப்பிற்காக பயணித்த வாகனத்திற்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு இடம்பெற்ற விபத்தின் போது சப்ரகமுவ மாகாண சபை ஆளுநர் டபிள்யூ ஜே. எம். லொக்குபண்டார வாகனத்தில் பயணிக்கவில்லை எனவும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஹொரனை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சப்ரகமுவ மாகாண சபை ஆளுநர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார முன்னாள் சபாநாயகர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (6-2)

## கடற்கடை பாதுகாப்பு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள தீர்மானம்

கடற்கரை பாதுகாப்பு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடற்கரை முகாமைத்துவ நடவடிக்கை யின் போது ஏற்படும் சிக்கல்களை தவிர்ப் பது இதன் நோக்கமென கடற்கரை பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் சுனில் பிரேமரத்ன தெரிவித்துள் ளார்.

இந்த சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)




## தொண்டைமானாறு பாலம் திறப்பதற்கு வழிவகுத்த அனைத்து உள்ளங்களுக்கும் வீடியோ கலாமினியின் வாழ்த்துக்கள்



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி பாலம் 30 வருடங்களுக்குப் பின் திறப்பதற்கு வழிகோலிய பொன்மனச் செம்மல் K.N டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் மேதகு ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ அவர்களுக்கும், மகன் நாமல் ராஜபக்ஷ அவர்களுக்கும் மதிப்பிற்குரிய பொதுசன முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் யாழ். மாவட்ட அமைப்பாளர் தோழர் கமல் அவர்களுக்கும் மற்றும் அச்சுவேலி பிரதேச வலி. கிழக்கு அமைப்பாளர் S.P.M தருமராசா அவர்களுக்கும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வடமராட்சி அமைப்பாளர் ஐ.சிறிரங்கன் அவர்களுக்கும் E.P.D.P யின் பிரமுகர்கள் மற்றும் அனைத்துக்கட்சி உறுப்பினர்களுக்கும், இராணுவத்தளபதிகள், பிரதேச சமூகசேவையாளர்கள், சந்நிதி முருகன் பக்தர்கள் அனைவருக்கும் சந்நிதி முருகன் அருள் பாலிக்க வேண்டி வாழ்த்துகின்றோம்.

நான் "வெற்றி நமதே" பட ஆரம்பவிழாவன்று பொன்மனச்செம்மல் கௌரவ அமைச்சர் K.N டக்ளஸ் தேவானந்தா அண்ணன் முன் கதரிப்பாய் தம்பாலை ஊடாக தொண்டைமானாறு பாலம் ஊடாகத்தான் எனது முதல் படப் பிடிப்பைஆரம்பிப்பேன் என்று சபதம் எடுத்தேன். நானும் அவரிடம் தொந்தரவு கொடுத்து பாலம் திறக்க வழி செய்துள்ளார். அவருக்கு முதற்கண் நன்றிகளை தெரிவித்துக் கொண்டு "வெற்றி நமதே" சின்னத்திரைப்படம் அரசியல் படமல்ல. 1960ஆம் ஆண்டு முதல் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் சகோதர ஒற்றுமைகளை காட்டும் முதன் முதல் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எடுக்கப்படும் அதிக பொருட் செலவுடன் நமது தமிழ்க் கலாசாரங்களை உலக மக்கள் வியக்கும் வண்ணம் எடுக்கப்படும் படமாகும். 1960ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு காலப்பகுதிவரை எப்படியாக அப்போது இருந்தார்களோ அதை அப்படியே அக்காலகட்டத்தைப் பார்க்க முடியும். சகோதர நடிகர், நடிகைகளே தயாராக இருங்கள் விரைவில் வெற்றி நமதே படம் ஆரம்பிக்கவுள்ளோம் என்பதை மன மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய சின்னத்திரைப்படம்
உங்கள் கருத்துக்களை கடித மூலம் அறியத்தந்தால் எமக்கு உதவியாக இருக்கும்



வீடியோ கலாமினி
அச்சுவேலி

# ஐ.தே.கவுக்குள் உட்பூசல்கள்; ஆளும் கட்சிக்கு சாதகத்தன்மை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டமையினால் கட்சி உட்பூசல் பூதாகாரமாகியுள்ளது.

இவர் கட்சிக்குள் இணைந்து கொண்ட மையினால் ஐக்கிய தேசியக் கட்சி மேலும் உறுப்பினர்களை இழக்கக் கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உட்பூசல்கள் ஆளும் கட்சிக்கு பெரும் சாதகத் தன்மையை உருவாக்கும் என சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக் கொள்ளும் அரசாங்கத்தின் முனைப்புகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உட்பூசல்கள் சாதகத் தன்மையை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரசாங்கத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி நடத்தி வந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்துள்ளதாகவும் திகாம்பரம் மற்றும் பிரபா கணேசன் ஆகியோர் கட்சி தாவியதன் காரணமாக அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

சிறுபான்மை கட்சி உறுப்பினர்களை இலக்கு வைத்து ஆளும் கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிருப்தியுடன் காணப்படும் சிறுபான்மை கட்சி உறுப்பினர்களை ஆளும் கட்சியில் இணைத்துக் கொள்வதன் மூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (6-2)

# மத்திய மாகாணத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு மூடுவிழா

(கொழும்பு)

போதுமானளவு மாணவர்கள் இல்லாததன் காரணமாக மத்திய மாகாணத்தில் இதுவரையில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதாக மத்திய மாகாண சபையின் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மூடப்பட்டிருக்கும் அனைத்துப் பாடசாலைகளும் கிராமப்புற பாடசாலைகளாகவே இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கிராமப்புற பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நகரத்திலுள்ள பாடசாலைகளுக்கு சேர்ப்பதற்கு முன்னுரிமை காட்டுவது, கிராமப்புற பாடசாலைகளில் அடிப்படை வசதியின்மை, தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் இப்பாடசாலைகளில் கடமையாற்றுவதற்கு விருப்பமின்மை போன்றவை இப்பாடசாலைகள் மூடப்படுவதற்கு காரணங்களாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# வீதியில் குப்பைகளைக் கொட்டிய நால்வருக்கு ரூ.20 ஆயிரம் அபராதம்

(கொழும்பு)

பாதையில் குப்பைகளைக் கொட்டிய நான்கு பேருக்கு கண்டி பிரதான நீதவான் லலித் ஏக்கநாயக்க 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்துள்ளார்.

கண்டி கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பேர் பாதையோரங்களில் குப்பையைக் கொட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு கட்டுகஸ்தோட்டை பொலிஸாரால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

பாதையோரங்களில் குப்பையைக் கொட்டியதற்காக இந்த நான்கு பேருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (6-2)

# தொடர்ந்தும் மரநிழலிலேயே கல்வி; இடர்களை எதிர்நோக்கும் மாணவர்கள்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கைச் சேர்ந்த 15 ஆயிரம் மாணவ மாணவியர்கள் மர நிழலில் தமது கல்வி நடவடிக்கைகளை தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மாணவர்களின் அநேக பாடசாலைகளை இடம் பெயர்ந்த மக்கள் தங்களது இருப்பிடங்களாக மாற்றிக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

அரசாங்கம் பல மில்லியன் ரூபாவை இராணுவ முகாம்களுக்காக ஒதுக்கீடு செய்கின்ற போதிலும் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய கரிசனை காட்டவில்லை என குற்றம் சுமத்தப்படுகிறது.

வவுனியா, ஓமந்தை, கிளிநொச்சி உள்ளிட்ட பிரதேசங்களில் பல பாடசாலைகள் இடம்பெயர்ந்த முகாம்களாக பயன்படுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

யுத்தம் நிறைவடைந்து 14 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் ஓமந்தை மத்திய மகாவித்தியாலயம் இடம்பெயர்ந்த மக்கள் தங்கும் முகாமாக பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் குறித்த மக்களை மீள் குடியேற்றவோ அல்லது வேறு இடம்பெயர்முகாம்களை அமைத்துக் கொடுக்கவோ அரசாங்கம் இன்னமும் ஆவன செய்யவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது..

இதேவேளை வடக்கு - கிழக்கு பாடசாலைகளில் கல்வி ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக இலங்கை ஆசிரியர் சேவைகள் ஒன்றியம் அறிவித்துள்ளது.

குறிப்பாக ஆங்கில மொழியை கற்பிப்பதற்கு போதியளவு ஆசிரியர்கள் கிடையாதெனவும் குடிநீர், கட்டடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளின்றி வடக்கு-கிழக்கு மாணவர்கள் பெரும் இடர்களை எதிர்நோக்குவதாக குறிப்பிடப்படுகிறது. (6-2)


## 12 மாத காலத்தில் சரளமாக ENGLISH பேச விரும்புபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

**PR EDUCATIONAL TOOLS PTY LTD - AUSTRALIA** என்னும் நிறுவனம் **AUSTRALIA** வில் பதிவு செய்யப்பட்டது. இந்த நிறுவனம் **ENGLISH, SCIENCE, CHEMISTRY, MATHS & PHYSICS** பாடங்களை ஆசிரியர்களின் உதவியின்றி கற்கக் கூடிய முறையில் புதிய வழிமுறைகளை உபயோகித்து **DVD** மூலம் பல்வேறு நாடுகளில் விற்பனைசெய்து வருகின்றது.

**ENGLISH DVD** வெளியீடுகள் யாவும் 13 வருடங்களாக **AUSTRALIA** வில் வாழ்ந்து வருகின்ற யாழ்ப்பாணம் மற்றும் **AUSTRALIA** பல் கலைக் கழகங்களில் பட்டப்படிப்புக்களை மேற்கொண்டு **AUSTRALIA** வில் **SCIENCE & CHEMISTRY** ஆசிரி யராக கடமையாற்றும் ஆங்கில மொழியை சரளமாகவும் அழகாகவும் பேசும் **MR.POOBALU VAR ATHAN (B.Biotech Bsc B.Teaching Msc)** என்பவரினால் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது.

1. இவ்வெளியீடுகள் அன்றாட நடைமுறை காட்சிகளுடன் ஒரு தொடராக வெளிவருகின்றது. இவற்றை பெற்றுக் கொள்பவர்களுக்கு வருடம் தோறும் இலவசமாக ஆங்கில **Audio Cd** க்கள் வழங்கப்படும்.
2. எமது வெளியீடுகள் ஆங்கிலத்தையும் தமிழையும் தொடர்புபடுத்தி அதன் வேறுபாடுகள், ஒற்றுமைகள் என்பனவற்றை கருத்தில் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளது.
3. மிக இலகுவான முறையில் உண்மையான காட்சிகளின் மூலம் இவ் **DVD** க்கள் உருவாக்கப்பட்டுள்ளது.
4. எமது வெளியீடுகள் முழுவதும் நடைமுறை வாழ்க்கைகளில் தமிழர்களும் ஆங்கிலேயர்களும் உரையாடுகின்ற முழு விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. ஒவ்வொரு **DVD** உடனும் **DVD** யில் சொல்லப்படுகின்ற வசனங்களை கொண்ட ஒரு சிறு புத்தகமும் தரப்படும்.
6. இந்த **DVD** க்கள் தமிழர்கள் சிறந்த முறையில் ஆங்கிலம் பேச வேண்டும் என்ற எண்ணக் கருவை மையமாக வைத்து உருவாக்கப்பட்டது.

### எமது வெளியீடுகளை கற்பதன் மூலம்

1. சிறந்த முறையில் ஆங்கில இலக்கணத்தை கற்றுக்கொள்வீர்கள்.
2. சிறந்த முறையில் வசனங்களை அமைத்து அழகாக ஆங்கிலம் பேசுவீர்கள்.
3. சிறந்த முறையில் சொற்களை உச்சரிப்பீர்கள்.
4. 12 மாத காலத்தில் சரளமாகவும் அழகாகவும் எந்த ஒரு சிக்கலும் இன்றி வாழ்க்கையின் எந்தப்பகுதியிலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் சரளமாகவும் அழகாகவும் ஆங்கிலத்தைப் பேசுவீர்கள்.

**எங்கள் DVD & CD மட்டுமே நீங்கள் சிறந்த முறையில் ஆங்கிலத்தை பேசுவதற்கும் எழுதுவதற்கும் உதவும்.**

**Note**: உள்நாட்டிலோ அல்லது ஆங்கில மொழியை தாய் மொழியாக கொண்டிராத நாடுகளில் (உதார ணமாக இந்தியா) உருவாக்கப்பட்ட ஆங்கில **DVD** க்கள் அல்லது **CD** க்கள் நீங்கள் சிறந்த முறையில் ஆங் கிலத்தை பேசுவதற்கும் எழுதுவதற்கும் உதவமாட்டாது. ஏனெனில் இவற்றை தயாரிப்பவர்களின் **Spoken English** அறிவு மிகவும் குறைவானது. அத்துடன் இவர்களின் ஆங்கில உச்சரிப்பும் சிறந்ததல்ல.

*Note:* **எமது DVD க்கள் CD க்களை COPY செய்வது குற்றமானது. இந்த குற்றச் செயல் செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.**

எமது முதலாவது **DVD** யை கற்றுக்கொள்வதன் மூலம் சிறந்த முறையில் ஆங்கிலம் பேசுவது, எழுதுவது போன்றவைகளில் மிகச்சிறந்த முன்னேற்றத்தை அடைவீர்கள் என்பதற்கு நாம் உத்தரவாதம் தருகின்றோம் எமது (Sample DVD யை பார்க்க விரும்பின் பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.)

**கலாசேத்திரா நுண்கலை வளாகம் (Kalashethra Educational Fine Arts Campus),**
**அம்மன் கோவிலடி ,மின்சார நிலைய வீதி,**
**ஊரெழு மேற்கு, ஊரெழு.**

*தொடர்பு கொள்ளவேண்டிய தொலை பேசி எண்: 0217901991.*
**Emali: Chemistry 85@ rocketmail. compr.edu.tools.english.hb@gmail.com**

சிறந்த முறையில் ஆங்கில மொழி யை பேசவோ அல்லது எழுதவோ விரும்புபவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் அல்லது **Phone** இல் அல்லது **Email** இல் தொடர்பு கொள்ளவும்.

எமது **DVD & CD** க்கள் வயது வேறுபாடின்றி, தொழில் வேறுபாடின்றி பாடசாலை மாணவர்கள் ,**DOCTORS, Engineers, Accountants, University Students ,UniversityLecturers, Carpenters, School teachers,Public Servants, Technical College Students, Nurses, Shop Assistants** மற்றும் யாவரும் உபயோகிக்கலாம்.

எமது வெளியீட்டைப்பெற விரும்புவோர் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் எதிர்வரும் ஆகஸ்ட் 31 ஆம் திகதிக்குள் முற்பணம் செலுத்தி உங்களின் பெயர்களை பதிவு செய்து கொள்ளவும்.DVD க்கள் செப்ரெம்பர் 20 ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படும்.

**விலை DVD+ புத்தகம்(DVD இல் சொல்லப்படும் வசனங்கள்) +Free Audio Cds ரூபா 1100/- மட்டுமே.**

*Note:* Free ஆங்கில **Audio CD** க்கள் தங்களால் பணம் செலுத்தப்பட்ட **DVD** யைப் பெற்றுக் கொண்ட சில வாரங்களில் வழங்கப்படும்.


பெற்றோர்களே, நலன் விரும்பிகளே! நீங்களும் உங்கள் பிள்ளைகளும் சிறந்த முறையில் ஆங்கிலத்தைப் பேச, எழுத விரும்பினால் எமது வெளியீடுகளை வாங்கிக் கொள்ளவும்.ஒரு வருடத்தில் குறிப்பிட்ட கால இடைவெளியில் 3 **DVD** க்கள் வெளிவரும்.

**ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய DVD க்கள் மட்டும் கையிருப்பில் உள்ளதால்DVD க்களைப் பெற்றுக் கொள்ள முந்துங்கள்.**

**வவுனியாவில் உள்ளோர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்:-0770790303**

**PREDUCATIONAL TOOLS PTY LTD-AUSTRALIA English DVDs**

(1845)

### மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களில்

# விவசாயக் கிணறுகளை அமைக்க நோர்வேயின் சங்கம் உதவி

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் மீள் குடியேற்றப்பட்ட மக்களின் பொரும்பான்மையனவர்கள் வாழ்க்கையை கொண்டு நடத்துவதில் பெரும் பிரச்சினைகளை சந்தித்து வருவதாக மீள் குடியேற்ற அமைச்சர் மில்றோய் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் பிரதான பிரச்சினை தண்ணீர் தட்டுப்பாடாகும். 90 வீதமான மக்கள் இந்தப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர். வருடத்தில் அதிக நாட்கள் வெப்பம் நிலவுவதும் குறைந்த மழை வீழ்ச்சிக் காரணமாகவும் பயிர் செய்கைகளில் ஈடுபடுவதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக விவசாயத்தை நம்பி வாழும் வட பகுதியைச் சேர்ந்த பல குடும் பங்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

மீள்குடியேற்ற அமைச்சு தலையீடுகளை மேற்கொண்டு நீர் விநியோகத்தை வழங்கிய போதிலும் அது மக்களின் தேவையை பூர்த்தி செய்ய போதுமானதல்ல. இந்த நிலையில் விவசாய கிணறுகளை அமைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதற்கு நோர்வேயின் சங்கம் உதவி வழங்க முன்வந்துள்ளது.

விவசாய நடவடிக்கைகளுக்கு கிணறுகளை அமைக்கும் பணிகளுக்கு உதவ மேலும் சில அமைப்புக்கள் முன் வந்துள்ளன. இது இடம்பெயர்ந்து மீள் குடியேறியுள்ள மக்களுக்கு உதவியாக அமையும் எனவும் அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (6-2)

# ஆங்கில மொழியை பிரபல்யப்படுத்தும் திட்டம் அரசதுறை ஊடாக ஆரம்பிக்க தீர்மானம்

ஆங்கிலமொழியை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை அரச துறையில் ஆரம்பிக்கப் போவதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரச ஊடகங்களின் ஒத்துழைப்பு இதற்குத் தேவையெனக் குறிப்பிட்ட அவர் அரச சேவையின் தரத்தை உயர்த்துவதற்கு ஆங்கிலமொழியின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டிற்குப் பொருந்தக்கூடிய வகையில் அணுகுமுறைகளுக்கு ஏற்ப ஆங்கில மொழியைப் பயிற்றுவிப்பதில் தவறு கிடையாது என கலாநிதி சுனில்டோ பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதன் ஊடாக உள்நாட்டுச் சிந்தனை ஆற்றலுக்குப் பங்கம் ஏற்படாது எனவும் அவர் கூறினார்.

நகரத்தில் மாத்திரமின்றி, கிராமத்திலும் ஆங்கில மொழியை பிரபல்யப் படுத்துவதற்கு ஜனாதிபதி கூடிய கவனம் செலுத்தி வருவதாகவும், அரசாங்கம் இதற்காக வழங்கும் அனுசரணை போற்றத்தக்கது எனவும் அவர் மேலும் கூறினார்.

கிராமியப் பாடசாலைகளில் ஆங்கில மொழியை பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் தற்போது வெற்றிகரமாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தென் கலை கல்வி வலய ஆசிரியர் பயிற்சி ஆலோசகரான கலாநிதி காயத்திரி அந்திர எமுனுதி கருத்துத் தெரிவிக்கையில்,

ஆங்கில மொழியை ஒரு பாடமாக அன்றி தொடர்பாடல் ஊடகமாகப் பிரபல்யப்படுத்த வேண்டும் எனக்கூறினார். (6-2)

# பாலிதகோஹண மீள அழைக்கப்படலாம்

(கொழும்பு)


ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி பாலித கோஹண மீள அழைக்கப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர் பாலித கோஹண மீள அழைக்கப்படக்கூடுமென குறிப்பிடப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளராகவோ அல்லது வேறு நாடொன்றின் தூதுவராகவோ பாலித கோஹண நியமிக்கப்படலாம் என வெளிவிவார அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நிபுணர்கள் குழு தொடர்பான இலங்கையின் நிலைப்பாட்டை உரிய முறையில் வெளிப்படுத்தத் தவறிய காரணத்தினால் பாலித கொஹண மீள அழைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(6-2)



யா/ வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் வடக்கின் வசந்தத்திட்டத்தின் கீழ் புதிய கட்டடம் திறந்து வைக்கபபட்டதன் பின்னர் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும் அருகில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா மற்றும் வித்தியாலய அதிபர் ச.திரவியராசா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(அல்வாய் நிருபர்)

# 09.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- கி.மு 48 - ஜூலியஸ் சீசர் பம்பீயை சமரில் தோற்கடித்தான். பம்பீ எகிப்துக்கு தப்பி ஓடினான்.
- 378 - ரோமப் பேரரசன் வேலென்ஸ் தலைமையிலான பெரும் படை எகிப்தில் தோல்வியடைந்தது. மன்னனும் அவனது பாதிப்பங்குப் படையினரும் கொல்லப்பட்டனர்.
- 1048 - 23 நாட்களே பதவியில் இருந்த பின்னர் பாப்பரசர் இரண்டாம் டமாசஸ் இறந்தார்.
- 1173 - பீசா சாயும் கோபுரத்தின் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப் பட்டன. இது இரு நூற்றாண்டுகளுக்குப் பின்னரே முடிவுற்றது.
- 1655 - ஒலிவர் குரொம்வெல் பிரபு இங்கிலாந்தை ஒன்பது மாகாணங்களாகப் பிரித்தார்.
- 1842 - ஐக்கிய அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையில் ரொக்கி மலைகளின் கிழக்குப் பகுதியில் எல்லைகளுக்கான உடன்பாடு எட்டப்பட்டது.
- 1892 - தோமஸ் அல்வா எடிசன் தனது இருவழி தந்திக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1902 - ஏழாம் எட்வேர்ட் ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினான்.
- 1907 - இங்கிலாந்தில் பிறௌன்சி தீவில் ஆகஸ்ட் 1 இல் ஆரம்பிக் கப்பட்ட சாரணிய இயக்கத்தின் முதல் பாசறை முடிவடைந்தது.
- 1942 - வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் ஆரம்பித்தகாக மகாத்மா காந்தி உட்படப் பல இந்திய காங்கிரஸ் தலைவர்கள் பம்பாயில் கைது செய்யப்பட்டனர்.
- 1965 - சிங்கப்பூர் மலேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து தனி நாடாகியது.
- 1965 - ஆர்கன்சசில் டைட்டான் ஏவுகணைத் தளத்தில் இடம்பெற்ற தீ விபத்தில் 53 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.
- 1974 - வாட்டர்கேட் ஊழல்: அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன் பதவி விலகினார்.
- 1991 - யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் ஜூலை 10 இல் ஆரம்பித்த ஆனையிறவு இராணுவ முகாமின் மீதான தாக்குதல் முடிவுக்கு வந்தது. இச்சமரில் 604 விடுதலைப் புலிகள் கொல்லப் பட்டனர்.

### பிறப்புகள்

- 1776 - அமேடியோ அவகாதரோ, இத்தாலிய வேதியியலாளர் (இ. 1856)
- 1974 - மகேஷ் பாபு, தெலுங்கு திரைப்பட நடிகர்


### இறப்புகள்

- 1962 - ஹேர்மன் ஹேசே, நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய எழுத்தாளர் (பி. 1877)
- 1969 - செசில் பிராங்க் பவெல், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய இயற்பியலாளர் (பி. 1903)
- 1975 - திமீத்ரி சொஸ்தகோவிச், ரஷ்ய இசையமைப்பாளர் (பி. 1906)
- 2000 - ஜோன் ஹர்சானி, நோபல் பரிசு பெற்ற ஹங்கேரிய பொருளியலாளர் (பி. 1920)

### சிறப்பு நாள்

- சிங்கப்பூர் - விடுதலை நாள் (1965)
- தென்னாபிரிக்கா - தேசிய பெண்கள் நாள்

**1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய நகரான நாகசாக்கியின் மீது ஐக்கிய அமெ ரிக்கா வீசிய கொழுத்த மனிதன் எனப் பெயரிடப்பட்ட அணு குண்டு 70,000 முதல் 90,000 வரையான பொதுமக்களை அதே இடத்தில்கொன்றது.**



# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010

யாழ்ப்பாணக் கல்வி வலயம்


## மாதிரி பரீட்சை–15
## வினாத்தாள் –I

நேரம்- 45 நிமிடம்

**ஒன்று தொடக்கம் 34 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**


1ஆம் 2 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உருக்கள் உள்ள மூன்று அடைப்புக்கள் தரப்படுகின்றன. இவற்றுள் ஒன்று ஏனைய இரண்டிலிருந்தும் வேறு படுகின்றது. அவ்வாறு வேறுபடும் அடைப்பினைத் தெரிவு செய்க.

1.




i ii iii

2.



i ii iii

3.



அருகேயுள்ள நீர்த் தாங்கியில் படத்தில் காட்டிப்பட்டவாறு பொருத்தப்பட்ட ஒரே அளவுான மூன்று குழாய்களில் இருந்து நீரைப் பெற்று சமனான மூன்று வாளிகளில் நிறைக்க முயன்ற போது எந்தக் குழாயின் கீழுள்ள வாளி முதலில் நிறைவடையும்.

1.A 2.B 3.C 4. எல்லாம்

4.இரவு வானத்திலே பூரண சந்திரன் தோன்றியது.
1.மேகம், கதிரவன் 2.ஆகாயம்,ஞாயிறு
3.சந்திரன், திங்கள் 3.விசும்பு, அம்புலி

**5ஆம் 6ஆம் வினாக்களில் உள்ள சொல் நிரைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம் பெறும் சொல்வரிசையின் கீழ் கோடிடுக.**

5. i. மேசை,கதிரை,வாங்கு,அலுமாரி
ii. காற்பந்து,கிறிக்கெட்,கரப்பந்து,வலைப்பந்து
iii. மஞ்சள்,சிவப்பு,நீலம்,நிறம்.


6. i.யானை,காட்டுப்பன்றி,முள்ளம்பன்றி,காட்டுவிலங்கு
ii.கால், கை,தலை,கழுத்து
iii.தளிர்,இலை,பூ,காய்

7.இரண்டு கார் வண்டிகள் ஒரே இடத்திலிருந்து கிழக்குத் திசையில் 100m பயணம் செய்து ஒரு கார் இடது புறமாகவும் மற்றைய கார் வலது புறமாகவும் திரும்பி ஒவ்வொன்றும் 50m பயணம் செய்து பின்னர் மீண்டும் ஒரு கார் இடது புறமும் மற்றைய கார் வலது புறமும் திரும்பி 100 m பயணத்தைத் தொடர்ந்த பின் இரு கார்களுக்கும் இடையேயான தூரம் யாது?
1.250m 2.100m 3.150m 4.300m


8.எனது சேமிப்பு உண்டியலை உடைத்து அதிலிருந்த நாணயங்களைக் கணக்கிட்ட போது அதில் நான்கு வகையான நாணயங்கள் சம எண்ணிக்கையில் காணப்பட்டன. அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 51 ஆகும். உண்டியலிலிருந்த நாணயங்கள் எவை?
i.சதம் 50 நாணயங்கள் 6 ரூபா 1 நாணயங்கள் 6 ரூபா 2 நாணயங்கள் 6 ரூபா 5 நாணயங்கள் 6.
ii.சதம் 50 நாணயங்கள் 5 ரூபா 1 நாணயங்கள் 5 ரூபா 2 நாணயங்கள் 5 நாணயங்கள் 5.
iii.சதம் 50 நாணயங்கள் 4 ரூபா 1 நாணயங்கள் 7 ரூபா 2 நாணயங்கள் 6 ரூபா 5 நாணயங்கள் 6.

9.100m ஓட்டப் போட்டியில் பங்கேற்ற நால்வர் ஓடி முடிந்த நேரங்களை நிறுத்தற்கடிகாரம் பின்வருமாறு காட்டியது.
கமலன் 01:12 விமலன் 01:24 அகிலன் 01:18 நகுலன் 01:08 முதலிடம் பெற்றவர் யார்.
1. கமலன் 2. அகிலன் 3. நகுலன் 4. விமலன்

10.1.




இவ் ஆங்கில எழுத்தை முகம் பார்க்கும் கண்ணாடி முன் நிறுத்தும் போது அது கண்ணாடியில் தோன்றும் விதத்தைக் காட்டும் சரியான விடை.



1 2 3 4

11



இக் காகித அட்டையைக் கோடுகள் வழியே மடித்து ஒட்டுவதனூடாக உருவாக்கக் கூடிய உரு எது?

நளை ii. கனவுரு
iii.சதுரமுகி iv.நான்முகி

12.துவிச்சக்கரவண்டியில் இருவர் சென்று கொண்டிருந்தனர் ஒருவர் மற்றையவரின் அக்கா ஆவார். மற்றையவர் அக்காவின் தங்கை அல்ல. எனின் அக்காவிற்கு மற்றையவர் என்ன உறவு?
i.தங்கை ii.தாய்
iii.அண்ணா iv.தம்பி

13.தரப்பட்ட போக்குவரத்துச் சாதனங்களில் வேகம் குறைந்ததிலிருந்து வேகம் கூடியது என்ற அடிப்படையில் சரியான ஒழுங்கு முறை எது?
i.துவிச்சக்கரவண்டி,மாட்டுவண்டி,முச்சக்கரவண்டி,கார்வண்டி.
ii.மாட்டுவண்டி,துவிச்சக்கரவண்டி ,முச்சக்கரவண்டி,கார்வண்டி
iii.கார்வண்டி,மாட்டுவண்டி, முச்சக்கரவண்டி, துவிச்சக்கரவண்டி
iv.துவிச்சக்கரவண்டி, கார்வண்டி,முச்சக்கரவண்டி,மாட்டுவண்டி

14.**அசுத்தமான நீரைப் பருகுதல் கூடாது** அதற்குக் காரணமாக அமையக் கூடியது.
i. அது சுவை குறைவடைந்து காணப்படும்
ii.அதில் நோய்க்கிருமிகள் காணப்படலாம்
iii.அது உவர் தன்மையுடையது
iv.அது வாசனை குறைவடைந்து காணப்படும்.

15. ஆம் 16 ஆம் வினாக்கள் பின்வரும் கூட்டில் உள்ள எழுத்துக் களையும் இலக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டவை

A L X B H G N P O U K D C
5 4 9 6 7 4 3 1 2 7 1 8 5
ம ல ப க ட ச அ வ ம்

15. அடுத்துவரும் மூன்று இலக்கங்களைக் கூட்டும்போது கூட்டுத்தொகை ஆகவரும் மூன்று இலக்கங்களைச் சுற்றி வட்டமிடுக.

16. தாமரையைக் குறிக்கும் வேறோர் சொல்லுக்குரிய நான்கு எழுத்துக்களின் கீழ் கோடிடுக.

**17ஆம் 18 ஆம் வினாக்களில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.**

17. நீளம் ⟹ மீற்றர் நிறை ⟹ ..............................
i. லீற்றர் ii. கிலோகிராம் iii. கிராம் iv தொன்

18. சிங்கம் ⟹ இறைச்சி மாடு ⟹ ..............................
i. வைக்கோல் ii. சோறு iii.நீர் iv மரக்கறி

19. விருந்தொன்றில் கலந்து கொண்ட 20 மாணவர்களில் 12பேர் வடை உண்டனர். 14 பேர் வாழைப்பழம் உண்டனர். அவர்கள் அனைவரும் வடை அல்லது வாழைப்பழம். உண்டனர். சிலர் இரண்டையும் உண்டனர் அவ்வாறு உண்டவர்களின் எண்ணிக்கை யாது?
i. 6 ii.12 iii 14 iv. 20

20. பாடசாலை ஆரம்பித்தவுடன் மாணவர்கள் முதலில் உடற் பயிற்சியில் ஈடுபடுவார்கள்.
 i. இது ஒரு போதும் உண்மையானதன்று
 ii. இது எப்போதும் உண்மையாகும்.
 iii இது பெரும்பாலும் உண்மையாகும்.

| மாதம் | மோட்டார் சைக்கிள் | கார் | முச்சக்கர வண்டி |
|---|---|---|---|
| ஜனவரி | 320 | 110 | 80 |
| பெப்ரவரி | 340 | 100 | 90 |
| மார்ச் | 360 | 90 | 100 |
| ஏப்ரல் | 380 | 80 | 110 |

21. மேலே தரப்பட்ட விபரங்களுக்கமைய நான்கு மாதங்களில் இறக்குமதி செய்யப்பட்ட கார்வண்டிகளின் எண்ணிக்கை யாது?

i. 380 ii. 360 iii 1400 iv 120

22. எந்த மாதத்தில் கூடுதலான வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன?

i.ஜனவரி ii. பெப்ரவரி iii மார்ச் iv ஏப்ரல்

23. மாலா நான்கு சிறிய சதுரங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் ஒரு பெரிய சதுரத்தை அமைத்தாள். அவள் அமைத்த பெரிய சதுரத்தின் நீளம் 12cm ஆகும். சிறிய சதுர மொன்றின் ஒரு பக்க நீளம் யாது?

i. 4cm ii. 12cm iii 6cm iv 2cm

24. விபத்தில் சிக்கிய மாணவி ஒருத்தி 3 வாரங்கள் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றாள். அவள் மருத்துவ மனையில் இருந்து பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி விடுவிக்கப்பட்டாள் ஆயின் அவள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட திகதி யாது?


1. ஜனவரி 18 2. ஜனவரி 19 3. ஜனவரி 17 4. ஜனவரி 20

25. சாந்தனின் தந்தை ஓர் முன்னாள் ஆசிரியர் அவரின் மாணவர்கள் இன்றும் கூட அவரின் சேவையை மதிக்கிறார்கள்.
 i. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
 ii. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
 iii இளமையில் கல்வி சிலையில் எழுத்து

26. நாம் எமது கஷ்டங்களை மூடி மறைத்துச் சிரித்துப் பேசினாலும் நம்மைப் பார்ப்பவர்கள் அதனைக் கண்டுபிடித்து விடுவார்கள்.
 i. பொறுத்தார் பூமியாள்வார்
 ii. அழுத பிள்ளை பால்குடிக்கும்
 iii அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.


27. இரண்டு தோடம்பழங்களின் நிறை ஒரு பப்பாசிப்பழத்தின் நிறைக்குச் சமனாகும். 1 தோடம்பழத்தின் நிறை 4 அப்பிள் பழங்களின் நிறைக்குச் சமனாகும். இரண்டு அப்பிள் பழங்களின் நிறை ஒரு வாழைப்பழத்தின் நிறைக்குச் சமனாகும். ஒரு பப்பாசிப் பழத்தின் நிறைக்குச் சமனான வாழைப்பழங்களின் எண்ணிக்கை யாது?

i.8 ii.2 iii 4 iv12




அடைப்பில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடைகளைத் தெரிவு செய்க.


28.



எதற்குச் சமம்

i. 800g ii.1kg200g
iii 600g iv 1600g

29. சரியான தொடர்பைக் காட்டும் விடை யாது?




30. குளம் ஒன்றை வெட்டுவதற்கு 9 மனிதர்களுக்கு 8 நாட்கள் தேவை. எனக் கணக்கிடப்பட்டது. இந்த வேலையை முடிக்க 12 மனிதர்களுக்கு எத்தனை நாட்கள் தேவை?
 i. 72நாட்கள் ii. 17நாட்கள் iii 5நாட்கள் iv 6நாட்கள்

2008 ஆம் ஆண்டின் ஒவ்வொரு மாதத்தினதும் முதலாந் திகதி வாரத்தின் என்ன நாள் என்பதைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| மாதம் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | யூன் | யூலை | ஓகஸ்ட் | செப்ரெம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாதத்தின் நாட்களின் எண்ணிக்கை | 31 | 29 | 31 | 30 | 31 | 30 | 31 | 31 | 30 |
| வாரத்தின் நாள் | செவ்வாய் | வெள்ளி | சனி | செவ்வாய் | வியாழன் | ஞாயிறு | செவ்வாய் | | |

31. இதற்கேற்ப் ஓகஸ்ட் முதலாந்திகதியும் செப்ரெம்பர் முதலாந்திகதியும் முறையே
 i. வெள்ளி, திங்கள் iii வெள்ளி, ஞாயிறு
 ii. திங்கள், புதன் iv சனி, திங்கள்

**32, 33 ஆம் வினாக்களில் குறிப்பிடப்படும் விடயத்தைத் தெரிவு செய்க.**

32. கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெரும்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி எங்கும் - நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.

i. குரங்கு ii. காற்று iii. எறும்பு iv நீர்

33. மனிதர்கள் எங்களை வீட்டில் வளர்க்கிறார்கள் மிஞ்சிய உணவைத் தான் எங்களுக்குக் கொடுக்கிறார்கள். எங்களது முட்டைகளையும் எடுத்துக் கொண்டு எங்களையும் உணவாக உணர்கிறார்கள் நன்றி கெட்ட மனிதர்கள்

i.நாய் ii.கோழி iii.புறா iv. கிளி

34. ஒரு முக்கோண வடிவப் பூம்பாத்தி ஒன்றைச் சுற்றிக் கம்பங்கள் நாட்டப்பட்டிருந்தன. எந்தவொரு பக்க முழுநீளத்தை நோக்கினாலும் 6 கம்பங்களே காணப்பட்டன. அப்பூம்பாத்தியைச் சுற்றி நாட்டப்பட்டுள்ள கம்பங்களின் எண்ணிக்கை.

i.15 ii.18 iii.24 iv. 20

**35, 36 ஆகிய வினாக்களில் குறிப்பிடப்படும் விடயத்தை எழுதுக.**

35. முதலெழுத்து ஓடத்தில் உண்டு. மாடத்தில் இல்லை. இரண்டாம் எழுத்து நாகத்தில் உண்டு. தாகத்தில் இல்லை. மூன்றாம் எழுத்து பொய்யில் உண்டு. பொதியில் இல்லை. ........................

36. முதலெழுத்து தாமதத்தில் உண்டு. சாமரத்தில் இல்லை. இரண்டாம் எழுத்து வனத்திலுண்டு. வானத்தில் இல்லை. மூன்றாம் எழுத்து தரத்தில் உண்டு. தசத்தில் இல்லை. நான்காம் எழுத்து கும்மியில் உண்டு. குடுமியில் இல்லை. ..............................

**பின்வரும் புதிரை வாசித்து 37, 38 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**

சாந்தன், காந்தன் என்னும் இருவர். தேநீர்ச்சாலை ஒன்றுக்குச் செல்லத் தீர்மானித்தனர். புறப்படும் போது அவரவரிடம் உள்ள பணத்தை ஒப்பிட்டுப் பார்த்தனர். சாந்தன் எனக்கு நீ நூறு ரூபாய் கொடுத்தால் உன்னைப்போல இருமடங்கு பணம் உள்ளவனாவேன். என்றான். காந்தன் நீ எனக்குப் பத்து ரூபாய் கொடுத்தால் நான் உன்னைப் போல் ஆறுமடங்கு பணமுள்ளவனாவேன் என்றான்.

37. சாந்தனிடம் இருந்த பணம் எவ்வளவு?

38. காந்தனிடம் இருந்த பணம் எவ்வளவு?

**இப்பாடலை வாசித்து 39,40 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக.**

மீன்கள் கோடி சூழ வெண்ணிலாவே - ஒரு
வெள்ளியோடம் போல வரும் வெண்ணிலாவே
பாலுவெங் கதிர் குளிக்கும் வெண்ணிலாவே - நித்தம்
பாற்கடலும் ஆடுவையோ? வெண்ணிலாவே!

39. நித்தம் என்பதன் கருத்து யாது?

40. வெண்ணிலா எதைப் போல வருவதாகப் பாடல் கூறுகின்றது?

# நீரிழிவு நோய் கட்டுப்பாடும் மூலிகை மருத்துவமும்

★ புதினா

★ கொவ்வைக்காய்

★ எலுமிச்சம்பழ ரசம்

★ இலைக்கஞ்சி

★ கொய்யா

★ ஜம்புக்காய்

★ அம்பிரலங்காய்

★ குருவித்தலைப்பாகல்

★ எது சாப்பிட்டாலும் கொஞ்சமாகவே சாப்பிட வேண்டும்.

★ எப்போதும் மனதை அமைதியாக வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

★ ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் ஆனால் உழைக்காமல், நடக்காமல் இருக்கக் கூடாது.

★ மருத்துவரை அடிக்கடி கலந்து ஆலோசிக்க வேண்டும்.

★ உற்சாகமாக இருக்க வேண்டும்.

★ நீரிழிவு நோயால் இளைப்பு வராது இதனால் நீண்டநாள் வாழலாம் என்ற பரிபூரணமான நம்பிக்கையோடு உற்சாகமாக இருக்க வேண்டும்.

★ நீரிழிவு நோயாளிகள் அவசியம் சாப்பிட வேண்டிய உணவுகளை அடிப்படையாகக் கொண்டு மூலிகை உணவு, மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. இன்னும் சில உணவுகள் உள்ளன.

இவை காபோவைதரேற்று உணவாக இருந்த போதிலும் இக் காபோவைதரேற்று உணவுகளை உட்கொள்கின்ற போது நமது உணவுப் பாதையில் இவை எளிதாக ஜீரணமடையச் செய்யப்படுவதில்லை. இவை கொஞ்சமாகவே ஜீரணமாகும். மீதி கழிவாக வெளியேறும். இவை கொஞ்சமாக ஜீரணமாவதன் மூலம் இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு கொஞ்சமாகவே இருக்கும். எனவே இந்த வகை உணவுகள் இருவகையில் நோயாளிக்கு பயன்படும்.

1. இவை இரத்தத்தில் குளுக்கோஸின் அளவை சீராக வைத்திருக்கும்.

2. இவற்றை சாப்பிடுகின்றபோது அவை வயிற்றை நிரப்பி பசிக்காமல் செய்வதால் அதிகளவு பிற உணவுகளையும் காபோவைதரேற் உணவையும் உண்ணமுடியாது போகின்றது.

எனவே இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு சீராக இருக்கும். இந்த உணவுகளிலிருந்து காபோவைதரேற்று மெதுவாகவும் மிகவும் குறைந்த அளவிலுமே வரும்.

இவற்றில் நார்ப்பொருள் அதிகம் காணப் படும்.

உதாரணம் - பச்சைக் காய்கறி
கீரைவகை
தானியங்கள்




நீரிழிவு நோய் நிலைமையில்
பயன்படுத் தப் படக் கூடிய
மூலிகைகள்
பற்றிய மருத்துவ குறிப்புகள்

★ சிறுகுறிஞ்சா இலைகளை நிழலில் உலர்த்தி நுண்ணிய பொடியாக செய்து (4-8g) வீதம் காலை மாலை வெந்நீரில் உட்கொண்டு வர நீரிழிவு நோய் கட்டுப்படும்.

★ சிறு குறிஞ்சா இலைப் பொடியை சிவப்புப்பச்சை அரிசியுடன் கலந்து மாவினை பிட்டாகவோ இடியப்பமாகவோ அவித்து உண்ணலாம்.




★ பப்பாசி பிஞ்சை தோலுடன் கழுவிய பின்பு சீவி அதிலிருந்து வடியும் பாலையும் சிறு துண்டுகளையும் 3 ஆம் பாலில் மிளகாய், வெங்காயம் இட்டு சமைத்து உண்ணலாம்.

★ கடல்ராஞ்சிப் பட்டையை நன்றாக சிதைத்து அதில் 40g எடுத்து 4 பங்கு நீரில் ஊறவிட்டு 30-40ml வீதம் காலை, மாலை எடுக்கலாம்.

★ பாகல் பிஞ்சை சிறு துண்டுகளாக வெட்டி உலர்த்தி உணவில் சேர்க்கலாம்.

★ மேற்படி உலர்த்திய துண்டுகளை மரவுரலால் இடித்து 10-20g வரை 30ml ஆடை நீக்கிய பாலுடன் அருந்தி வரலாம்.

★ கொவ்வை கிழங்கின் சாற்றை 8-10 ml வீதம் மூன்று வேளை பருகி வர நீரிழிவு கட்டுப்படும்.

★ 25 கிராம் வெந்தயத்தை ஒரு கப் நீரில் ஊறவிட்டு மறு நாள் காலை அதனைக் குடித்து வரவேண்டும்.

★ நன்னாரி வேரை நன்கு கழுவி வெந்நீரில் ஊறவிட்டு காலை மாலை 30 மில்லிலீற்றர் அருந்தி வர நீரிழிவு கட்டுப்படும்.

★ வரகரிசியை சோறாக சமைத்து உண்டு வர நீரிழிவு நோய் கட்டுப்படுவதுடன் மலமிளக்கியாகவும் தொழில்படும்.

☞ மேற்கூறப்பட்டவற்றுள் பெரும்பாலான மூலிகைகள் எம்மை சுற்றியே காணப்படுகின்றன.

☞ சில உலர் மூலிகைகளை தமிழ் மருந்துக்கடைகளில் வாங்கிக்கொள்ளலாம்.

★ கறிவேப்பிலையை நிழலில் உலர்த்தி நுண்ணிய பொடியாக அரித்து ஆடை நீக்கிய பாலுடன் 4-8 கிராம் இட்டு அருந்தலாம். கறிவேப்பிலைக்கு பதிலாக மாந்துளி ரையும் பயன்படுத்தலாம்.

★ விளாம்பிசினை நீரில் கரைத்து வடித்துக் காய்ச்சி தூய்மைப்படுத்தி உலர்த்தி பொடித்து 24 கிராம் வீதம் வெந்நீரில் உட் கொள்ள நீரிழிவு கட்டுப்படும்.

★ தொட்டாச்சுருங்கி இலை, வேர்களைச் சேகரித்து நிழலில் உலர்த்தி இடித்து அரித்து வைத்துக்கொள்ளவும். 1-2 கிராம் வெந்நீரில் அருந்த நீரிழிவு கட்டுப்படும்.

★ நிலப்பணங்கிழங்கினை பாலில் அவித்து மேற்ரோலையும் நடு நரம்பையும் நீக்கி நிழலில் உலர்த்தி இடித்து அரித்து ,ஒரு தேக்கரண்டி அளவு ஆடை நீக்கிய பாலில் காலை மாலை உள்ளெடுக்க நீரிழிவு கட்டுப் படும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

★ ஆலம்பட்டையை நிழலில் உலர்த்தி பொடித்து குடிநீர் அல்லது பொடியாக 30 மில்லிலீற்றர் அல்லது ஒரு கிராம் அளவு உள்ளெடுக்க நீரிழிவு கட்டுப்படும்.


★ நெல்லி வற்றலை (உலர்ந்த பெருநெல்லிக்கனி -விதை நீக்கியது) ஒன்றாக கழுவி நிழலில் உலர்த்தி இடித்து அரித்து 1-2 கிராம் அளவு வெந்நீரில் அருந்தவும்.

★ மாந்துளிர்களை சேகரித்து நிழலில் உலர்த்தி இடித்து ஒரு கிராம் அளவு ஆடை நீக்கிய பாலுடன் அருந்த நீரிழிவு கட்டுப்படும்.

★ 1.கடல் இராஞ்சிப்பட்டை 300 கிராம்.
2.ஆவாரை வேர்ப்பட்டை 300 கிராம்
3.நெல்லி முள்ளி 10 கிராம்
4.தான்றிக்காய்த்தோல் 10கிராம்
5.பறங்கிப்பட்டை 10 கிராம்
6.தேற்றாங்கொட்டை 10கிராம் இவைகளை நன்றாக சுத்தம் செய்து பொடித்து அரித்து காற்றுப்புகா போத்தலில் பத்திரப் படுத்தவும் இரத்தத்தில் உள்ள சீனியின் அளவுக்கு ஏற்ப 1-2 கிராம் அளவு காலை மாலை வெந்நீரில் கொடுக்கவும்.

★ ஆவாரம் பஞ்சாங்கத் தேநீர் 120 மில்லி லீற்றர் .

ஆவாரம்பூ, தண்டு, இலை, வேர் , காய் இவற்றை நிழலில் உலர்த்தி அருவல் நொருவலாக இடித்து (தேயிலைத் தூள் போல) வெந்நீரில் ஊற வைத்து சாயம் இறக்கி அருந்தலாம்.



★ நாவல் விதை கோப்பி- 60 மில்லி லீற்றர்

ஆடை நீக்கிய பாலுடன் நாவல் விதையை இடித்து அதனுடன் நன்னாரி வேர், கொத்தமல்லி, சுக்கு சம எடை கலந்து இடித்து கோப்பி போல பயன்படுத்தலாம்.

★ 100 வருட வேப்பமரத்துப்பிசினை சேகரித்து சுத்தப்படுத்தி உலர்த்திப் பொடித்து இதற்கு சரி எடை சாமை அரிசி வறுத்து இடித்து மாவு சேர்த்து 1-2 கிராம் காலை மாலை வெந்நீரில் அருந்த நீரிழிவு கட்டுப் படும்.

★ சரக்கொன்றை இலை உலர்த்தி பொடித்து அரித்து 1-2 கிராம் அளவு அதை வெந்நீரில் எடுக்க நீரிழிவு கட்டுப்படும்.

## மூவரடங்கிய இராஜதந்திரிகள் குழு அடுத்தவாரம் இந்தியா பயணம்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த முக்கிய இராஜதந்திரிகள் அடுத்த வாரமளவில் இந்தியாவிற்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூவர் அடங்கிய விசேட இராஜதந்திரிகள் குழுவொன்று எதிர்வரும் 15 ஆம் திகதியன்று இந்தியாவிற்கு விஜயம் செய்ய உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதி பதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு தரப்பு உறவுகள் குறித்து விரிவாக இந்த விஜயத்தின் போது ஆராயப்பட உள்ளதாக அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றம் மற்றும் வடக்கு அபிவிருத்தித் திட்டம் போன்றன குறித்து இலங்கை இராஜதந்திரிகள் இந்திய உயரதிகாரிகளுக்கு விளக்கமளிக்க உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (6-2)

## முன்பள்ளி கல்விச் சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நாடத்தப்படும் முன்பள்ளி கல்விச் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 11ஆம் திகதி முதல் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பதாரிகள் 18 வ்யதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த.சாதாரணதரத்தில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம் மற்றும் தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இவ்விபரங்களுக்கான ஆதாரங்களை சமர்ப்பித்து விண்ணப்பபடிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி 27 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (6-2)

## நாட்டுக்கே உரித்தான விலங்கு, தாவர விபரங்கள் கணனி மயப்படுத்தப்படவுள்ளது

(கொழும்பு)

இலங்கைக்கே உரித்தான விலங்குகள் மற்றும் மரங்களின் பகுதிகள் என்பவற்றின் விபரங்களைக் கணனிமயப்படுத்த ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதுவரை இந்த விலங்கு மற்றும் மரங்களின் பகுதிகளின் விபரங்கள் முறையாகப் பட்டியல்படுத்தப்படவில்லை.

இதன் காரணமாக பல்வேறு நபர்கள் குறித்த விலங்கு மற்றும் மரங்களின் பகுதிகளைச் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்று மாதிரிகளுக்கான அனுமதி பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதாக அமைச்சு குறிப்பிட்டது.

புதிய செயற்றிட்டத்தின் கீழ் நாட்டுக்கே உரித்தான சகல விலங்குகள் மற்றும் மரங்களின் பகுதி விபரங்கள் கணனி வலயமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் இலங்கைச் சுங்கத் திணைக்ளம் மற்றும் வெளிவிகார அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து நாட்டுக்கே உரித்தான விலங்குகள் மற்றும் மரங்களின் பகுதிகளை வெளிநாட்டுக்கு கொண்டு செல்வதைத் தடுப்பதற்கு விரிவான சட்டம் ஒன்று தயாரிக்கப்படும் என ஆராய்ச்சி மற்றும் தொழிநுட்ப அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (6-2)

# சைவம் வளர்த்த தமிழ் இலக்கியங்கள் 1

## செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை




கடந்த 2500 ஆண்டுகளில் தமிழில் தோற்றம் கொண்டு வளர்ந்தமைந்த இலக்கியங்களைத் தமிழ் இலக்கியங்கள் எனக் கூறலாம். எழுந்த காலம் மற்றும் இலக்கியத்தின் யாப்பியல், கருப்பொருள் முதலியன தொடர்பாகத் தமிழ் இலக்கியங்களை வேறு பிரித்து ஆராயும் முறை நிலவி வருகிறது. சங்க இலக்கியம், பல்லவர் கால இலக்கியம், இருண்ட கால இலக்கியம், சோழர் கால இலக்கியம், தற்கால இலக்கியம் எனப் பாகுபடுத்தல் ஒரு வகை; யாப்பியல் மற்றும் கட்டமைப்பு வகையில் பெருங்காப்பியம், சிறு காப்பியம் எனப் பகுத்தல் மற்றொரு வகை, தமிழ்நாட்டு மக்களால் வழிபடப் பெறும் கடவுள்களை மையப்படுத்தி எழுந்த இலக்கியங்களைச் சமய இலக்கியங்கள் என்றால் வழக்கு. மேற் குறித்த சமய இலக்கியங்களில் ஒருவகை சிவனைக் குறித்து எழுந்த சைவ இலக்கியங்கள், இவற்றுள் சிவனை மையப்படுத்தி எழுந்த சைவ இலக்கியங்களே இக்கட்டுரையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

### சைவ - இலக்கியங்கள் என்ற குறியீடு

திருமுருகாற்றுப்படை காலம் தொடங்கித் தமிழ் மக்கள் வழிபடு கடவுளர்களிடையே உறவுமுறை கற்பிக்கும் பழக்கம் ஏற்பட்டது. எனவே, அவ்வகையில் தாய்த்தெய்வ வழிபாடாகிய சக்தி வழிபாடு, முருக வழிபாடு, கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப்பின் தமிழகத்தில் தோற்றம் கொண்டு வளர்ந்த கணபதி வழிபாடு, சிவன் - சக்தி - முருகன் அம்சமாகக் கருதப்பட்ட சிறுதெய்வ வழிபாடு என்பன எல்லாம் ஒருங்கிணைந்த சிவவழிபாட்டின் அங்கங்களாயின. எனவே, சைவ இலக்கியங்கள் என்ற குறியீட்டில் மேற்குறித்த அனைத்து வழிபாட்டு இலக்கியங்களும் ஒருங்கிணைத்துக் கொள்ளப்பட்டன. வைணவம் மட்டும் தனித்து ஆராயப்பட்டது.

### 16 ஆயிரம் சைவத் தமிழ் நூல்கள்

உலக மொழிகளோடு ஒப்பிடுகையில், எண்ணிக்கை, காலப்பழமை, யாப்பியல், இசை வடிவங்கள் கொண்ட தமிழ் இலக்கியப் பரப்பே பரந்ததும், விரிந்ததும் ஆகும். தமிழில் கடைச் சங்க காலம் முதற் கொண்டு, 20 - ஆம் நூற்றாண்டின் இறுதி வரை தோற்றம் கொண்ட பல்வேறு வகையான இலக்கியப் பரப்பில், அறுபது விழுக்காட்டு இலக்கியங்கள் சைவ சமயம் குறித்து எழுந்தன என்பது நன்கு நினைவு கூரப்பட வேண்டியதாகும். சைவ சமயக் களஞ்சியம் ஒன்றைத் தயாரிக்கும் எனது



கடந்த ஐந்தாண்டு கால முயற்சியில், சைவ சமய இலக்கியங்களின் தொகை பதினாறாயிரத்தை நெருங்குவது வியப்பாக நின்றது. இவற்றில், எண்பது விழுக்காட்டு நூல்கள் அச் சிடப்பட்டுள்ளன. இவற்றுள் இடம் பெற்ற பாடல் களின் தொகை பல இலட்சங்களைத் தாண் டும்.

### தொல்காப்பியம் முதல் சிலம்பு வரை

கல வரிசைப்படி, சைவ சமயம் தந்த தமிழ் இலக்கியங்களை இச்சிறிய பதிவில் அடையாளப்படுத்த மட்டுமே இயலும். விரிவான ஆய்வுகளுக்கு வாய்ப்பு இல்லை. 2750 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில், வெற்றி தருபவளாகக் கொற்றவை குறிக்கப்படுகிறாள். "கொடி நிலை கந்தழி" என்று தொடங்கும் நூற்பாவில், முருகன் பற்றிய குறிப்புள்ளதாக ஒரு சிலர் கருதுகின்றனர். தனிப்பாடல்களாக எடுத்துக்கொண்டால், எட்டுத் தொகையுள் ஒன்றாகிய பரிபாடலில், இசை வடிவாக முருகன், காடுகிழாள் (காளி) குறித் தெழுந்த சைவ-தனி-இசைப்பாடல்களைக் காண முடிகிறது. சைவம் தந்த தனிநூலாக, முதல் கொடையாகக் கிடைத்துள்ள நீண்ட வரிகளால் அமைந்தது நக்கீரனாரின் திருமுருகாற்றுப் படை. சிறிய இடைவெளிக்குப் பின் கி.பி.மூன்றாம் நூற்றாண்டினதாகக் கொள்ளத்தக்க இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில், சிவ-சக்தியாகிய உமையைப் போற்றிப் பாடும் தனிக் காதையாக வேட்டுவ வரியும், முருகனைப் புகழ்ந்து பாடும் "குன்றக் குரவை" யும் அமைந்தன.

### முதல் சிற்றிலக்கிய வடிவங்கள்

கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னதாகச் சங்க இலக்கிய இகப்பாட்டு நெறியில், சிவனைப் பாடுபொருளாகக் கொண்டு கல்லாடம் என்ற அரிய நூல் தோன்றியது. *கல்லாடம் கற்றவனிடம் சொல்லப்படாதே* என்பது பழமொழி. முதல் கணபதி வாழ்த்து இந் நூலில் இடம் பெற்றது. தொடர்ந்து காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகங்கள் இரண்டும், அற்புதத் திருவந்தாதியும், திரு இரட்டை மணிமாலையும் தோற்றம் கொண்டன. பதிகம் (10 பாடல்களைக் கொண்டது). அந்தாதி-(ஒரு பாடலின் நிறைவை அடுத்த பாடலின் தொடக்கமாகக் கொண்டு 100 பாடல்களில் அமைவது). இரட்டை மணிமாலை (இரண்டு வகை யாப்புகள் அமைந்த பாடல்களை மாறிமாறி அடுக்கி 20 பாடல்களில் நிறைவிப்பது) என்ற புத்திலக்கிய வடிவங்கள், அம்மையார் தமிழுக்குத் தந்த இலக்கியக் கொடைகளாகும்.

செந்தமிழ் வாரிதி
முனைவர் இரா. செல்வகணபதி

### தமிழ் ஆகமம்-திருமந்திரம்

"யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற தொடருக்கு அடுத்துத் தமிழ் இனப்பெருமை பேசும், ***ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்*** என்ற சமய-சமரசத்தை முன்வைத்த திருமூலரின் திருமந்திரம், சைவம் தந்த தமிழ் இலக்கியக் கொடைகளுள் சிறப்பாகக் குறிக்கத் தக்கது, ***என்னை நன்றாக இறைவன் படைத்தான், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே*** எனக் கட்டியம் கூறித் தொடங்கும் திருமூலர், சைவத்தைத் தோத்திர நெறியிலிருந்து சாத்திர நெறிக்கு எடுத்துச் சென்றார். கி.பி.14ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில், அறிவாராய்சசிக்கு உட்படுத்தக் கூடிய அறிவியல் பூர்வமான, ***சைவ சித்தாந்தம்*** என்ற பெருநெறி தோன்ற வித்திட்டவர் திருமூலர். தென்னாட்டு அறிஞர்களால் வடமொழியில் படைக்கப்பட்ட ஆகமங்களை, மொழிபெயர்ப்புச் செய்யாமல், தமிழ் ஆகமமாகத் திருமந்திரம் படைக்கப்பட்டது. அறம், யோகம், மருத்துவம், தத்துவம் எனத் தமிழில் எழுந்த ஒரு சைவக் கலைக்களஞ்சியமாகவே திருமந்திரம் நிற்கிறது. உணர்வுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, இந்நூலை அறிவாராய்ச்சிக்கு உட்படுத்தினால் கிடைக்கும் புதையல்கள் அன்னைத் தமிழுக்கு அளப்பரிய செல்வங்களை வழங்கும். (தொடரும்)

# ஐ.தே.க.விலிருந்து மூன்று எம்.பிக்கள் ஆளும் கட்சியில் இணையத் திட்டம்

ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்துடன் இணைந்து அபி விருத்தி நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கத் தயார் என குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.

குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைந்து கொள்வதன் மூலம் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 149ஆக உயரும் என தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# அரசசார்பற்ற நிறுவனமொன்றை ஆரம்பித்துள்ளார் கே.பி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரான குமரன் பத்மநாதன் அரச சார்பற்ற நிறுவனங்களை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நார்டோ எனப்படும் வடக்கு -கிழக்கு புனர் வாழ்வு நிறுவனம் என்ற பெயரில் ஓர் அரச சார்பற்ற நிறுவனத்தை குமரன் பத்மநாதன் ஆரம்பித்துள்ளதாகவும் இந்த நிறுவனம் ஒன்பது கிளைகளைக் கொண்டு இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு யாழ்ப்பாணம் திருகோணமலை கல்முனை மட்டக்களப்பு மற்றும் கொழும்பு ஆகிய நகரங்களை மையமாகக்கொண்டு போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர், சிறுமி யரின் நலன்கருதி இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந் நிறுவனத்திற்கு அரசாங்கம் நிதி உதவிகளை வழங்கவில்லை என அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிறுவனத்திற்கான சகல பணமும் வெளிநாட்டு புலம்பெயர் தமிழர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாகக் குறிப்பிடப் படுகிறது.

இதேவேளை இந்த நிறுவனத்தின் நடவடிக்கைகளை அரசாங்கம் கண்காணிப்புச் செய்யும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# மெக்சிக்கோவில் பாரவூர்தியிலிருந்து இலங்கையர்கள் உட்பட 76 பேர் மீட்பு

இலங்கை மற்றும் மத்திய அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த 76 குடியேற்றவாசிகள் மெக்சிக்கோ நாட்டில் கைவிடப்பட்டிருந்த பாரவூர்தியொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

சியாபஸ் மாநிலத்தில் வில்லாபுளோர்ஸ் - ஒகோஸோகௌட்லா நெடுஞ்சாலையில் அவர்கள் காணப்பட்டதாக மெக்சிக்கோ சட்டமா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். வாகனத்தில் மூன்று மீற்றர் அகலமும் எட்டு மீற்றர் நீளமும் கொண்ட இடமொன்றில் உடலில் நீர்ப்பற்றாக்குறைக்கு உள்ளான நிலையில், அவர்கள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மெக்சிக்கோவில் சட்டபூர்வமாக தங்கியிருப்பதற்கான எந்த ஆவணங்களையும் கொண்டிருக்கவில்லை எனவும் தாம் இலங்கை ,கௌதமாலா, ஹொண்டூராஸ் ஆகிய நாடுகளிலிருந்து வந்தவர்கள் என அவர்கள் கூறியுள்ளனர்.

மேற்படி குடியேற்றவாசிகளில் எத்தனை பெண்கள் ,பிள்ளைகள் இருக்கிறார்கள் என்ற விபரத்தை மேற்படி வட்டாரங்கள் தெரிவிக்கவில்லை.அவர்கள் அனைவரும் தேசிய குடிவரவு நிறுவகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவதற்கு சாத்தியமுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியேற்றவாசிகளை அந்த நிலையில் விட்டுச் சென்றவர் யார் என்பதை கண்டறிவதற்கான விசாரணைகளை மெக்சிக்கோ சட்டமா அதிபர் அலுவலகம் ஆரம்பித்துள்ளது. (6-2)

# ஆடிப்பூர மகா சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள் மிகு கண்ணகி ஆலய கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய ஆடிப்பூர மஹா சங்காபிஷேகம் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் காலை 7 மணிக்கு சங்கு பூசை, விசேட ஹோமம் , பூரணாகுதி, தீபாராதனையைத் தொடர்ந்து 9.30 மணிக்கு கும்ப வீதியுலாவும் சங்காபிஷேகமும் நடைபெற்று 11.30 மணிக்கு பூரகர்ம ருதுசாந்தி வைபவமும் நடைபெறும்.

அன்றிரவு 7 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சல் உற்சவமும் சுவாமி வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (6)

# காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் தனது கொள்கையை மாற்றவேண்டும்

## ப.சிதம்பரம் கண்டிப்பு

(புதுடில்லி)

காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் தனது கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

ராஜ்யசபாவில் உறுப்பினர்களின் கேள்விக்கு ப.சிதம்பரம் நேற்று முன்தினம் பதிலளித்து பேசியபோது,

ஹுரியத் தலைவர் கிலானி காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் யாரும் கல்லெறிந்து தாக்குதல் நடத்த வேண்டாம் என்றும் பொதுச் சொத்துக்களை சேதப்படுத்த வேண்டாம் என்றும் கூறியதாக தகவல்கள் வெளியாகின. அவரது கருத்தை வரவேற்கிறேன்.

காஷ்மீர் விவகாரம் குறித்து ஐ.நா. பொதுச் செயலர் எந்தவிதமான கருத்தையும் வெளியிடவில்லை.

இது தொடர்பாக வெளியான கருத்து ஐ.நா. அலுவலகத்தில் பணிபுரியும் பாகிஸ் தான் அதிகாரியின் கருத்தாகும். பாதுகாப்புப் படையினரின் சிறப்பு அதிகாரம் தொடர்பான வாக்குறுதியை காப்பாற்ற தொடர்ந்து முயற்சி மேற் கொள்ளப்பட்டுள்ளது.

காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் தனது கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும். இந் நிலவரம் தொடர்பாக ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் உள்ள அனைத்து கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நடைபெறவுள்ளது.

காஷ்மீரில் இயல்பு நிலை திரும்ப மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் அம் மாநில மக்களின் இதயங்களை வெற்றிக்



கொள்வோம் என ப.சிதம்பரம் கூறினார்.

காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் நேற்று முன்தினம் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்தது. முதன்முறையாக அம்மாநில முதல்வர் ஓமர் அப்துல்லாவின் வேண்டுகோளின் படி சிறப்பு அதிரடிப்படையினர் (ஆர்.ஏ.எம்) வர வழைக்கப்பட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பதற்றம் நிறைந்த பகுதிகளில் அவர்கள் நேற்று முன் தினம் பகல் கொடி அணிவகுப்பு நடத்தினர். (6-2)

# இலஞ்சம் வாங்கினால் இணையத்தில் புகைப்படம்

## தமிழக அரசு அதிரடி முடிவு

தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 500 க்கும் மேற்பட்டோர் இலஞ்சம் வாங்கியதாக கைதாகியுள்ளனர். இதனால் இலஞ்சம் வாங்கும் பழக்கத்தை ஒழிக்கும் விதமாக இலஞ்சம் வாங்கி சிக்குபவர்களின் தகவல்களை புகைப்படத்துடன் இணைய தளத் தில் வெளியிட தமிழக அரசு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலஞ்சம் வாங்குவோர் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்க இலஞ்ச ஒழிப்பு பொலிசாருக்கு தமிழக அரசு உத்தரவிட்டதால் கடந்த சில ஆண்டுகளாக இலஞ்ச ஒழிப்பு பொலிசார் வேட்டை தீவிரமாகியுள்ளது.

கடந்த ஆண்டு மண்டல கடவுச்சீட்டு அதிகாரி சுமதி கைது செய்யப்பட்டார். இவருக்கு உடந்தையாக இருந்ததாக முன்னாள் எம்.பி.யின் மகள் ஒருவரும் சிக்கினார். கடந்த வாரம் சினிமா தணிக்கை அதிகாரி ராஜ்குமார் ரூ10 ஆயிரம் இலஞ்சம் வாங்கிய குற்றத்துக்காக கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் துறையிலும் ஏட்டு முதல் உதவி கமிஷனர் வரை இலஞ்சம் வாங்கி கைதாவது வாடிக்கையான ஒன்றாகி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (6-2)


# காஷ்மீரில் ஊரடங்கு வாபஸ்; இயல்பு நிலை திரும்பியது

(ஸ்ரீநகர்)

வன்முறை காரணமாக காஷ்மீரில் பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவு நேற்று முழுவதுமாக விலக்கிக் கொள்ளப் பட்டது. நேற்று காஷ்மீர் பள்ளத்தாக்கின் எந்தப் பகுதியிலும் ஊரடங்கு உத்தரவு அமுலில் இல்லை என பொலிஸ் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஊரடங்கு உத்தரவு விலக்கிக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து ஸ்ரீநகர் மற்றும் காஷ்மீர் பள்ளத்தாக்கின் மற்றைய பகுதிகளில் கடைகளும் வணிக நிறுவனங்களும் திறக்கப்பட்டன.

பொதுமக்கள் ஏராளமானோர் தங்களது வீடுகளிலிருந்து வெளியே வந்து அத்தியாவசியப் பொருட்களை வாங்கிச் சென்றதாகத் தகவல்கள் தெரிவித்தன. (6-2)



# பாரதச் செய்திகள்

# பல்லினால் தேங்காய் உரித்து கின்னஸ் சாதனைக்கு முயற்சி



உலகளவில் சாதனை செய்வதற்கு பலர் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக எப்படியான விஷப் பரீட்சையினை செய்யவும் தயங்குவதில்லை. தங்களது உடலுறுப்புகளையே ஆயுதமாகப் பயன்படுத்தியும் பலர் சாதனை செய்து வருகின்றனர்.

அந்த வகையில் பெங்களூரைச் சேர்ந்த 32 வயதுடைய விஜய் குமார் என்ற வாலிபர் தனது பல்லினால் தேங்காய் உரித்து சாதனை படைத்துள்ளார்.

கின்னஸ் புத்தகத்தில் தனது பெயரினை பதிவுசெய்ய நினைத்த விஜய் குமார் ஒரு நிமிடத்திற்குள் மூன்று தேங்காய்களைத் தனது பல்லினால் உரித்துக் காண்பித்தார். இவரது இச்சாதனை கின்னஸ் தெரிவுக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-2)


# இலங்கைத்தமிழர்களுக்காக குரல் கொடுப்பவர்கள் தாக்கப்படுகின்றார்கள்-நல்லகண்ணு குற்றச்சாட்டு

இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பவர்கள் தாக்கப்படுகின்றனர் என்று நல்லகண்ணு குற்றம் சாட்டினார்.

கருத்துரிமை களம் என்ற அமைப்பின் சார்பில் சென்னையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த பொதுக்கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு உரையாற்றுகையில்,

தி.மு.க. ஆட்சியில் கருத்து சுதந்திரம் மறுக்கப்படுகிறது. இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பவர்கள் செம்மொழி மாநாட்டை பற்றி கருத்து தெரிவிப்பவர்கள் தாக்கப்படுகின்றனர். அவர்கள் மீது பல்வேறு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. தா. பாண்டியன் கார் எரிப்பு, பாரதிராஜா அலுவலகம் நொறுக்கப்பட்டது, பழ கருப்பையாவும் அவரது வீடும் தாக்கப்பட்டது ஆகியவை இதற்கு உதாரணங்களாகும்.



திராவிட கழகத் தலைவர் கி.வீரமணி வீட்டில் கல்லெறிந்தவர்களை கண்டறிந்து பொலிஸார் நடவடிக்கை எடுக்கின்றனர்.

ஆனால்பழகருப்பையாவை தாக்கியவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. அதுபோல தமி ழகத்தில் நிர்வாகம் சீர்குலைந்துள்ளது.

இதுவரை 400க்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். சமீபத்தில் நாகை மீனவர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆனாலும் இந்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றார். (6-2)

# மேற்குவங்க மாநிலத்தில் மாவோயிஸ்ட்டுகள் மிரட்டல்

## ரயில்வே ஊழியர்களை கடத்தினர்

(புருலியா)

மேற்கு வங்கம் புருலியா மாவட்டத்தில் ரயில் நிலைய அதிகாரி உட்பட நான்கு பேரைக் கடத்திச் சென்ற தீவிரவாதிகள் லால்கார்க்கில் இன்று நடக்கும் மம்தா கட்சி பேரணியில் கலந்து கொள்ளக் கூடாது என மிரட்டல் விடுத்தனர்.

அதே நேரத்தில் பீகாரில் நடந்த மற்றொரு சம்பவத்தில் ரயில் நிலையத்தை கிராம மக்கள் சூறையாடினர்.

மேற்கு வங்கம் புருலியா மாவட்டத்தில் உள்ளது. உர்மா ரயில் நிலையம் கடந்த 6ஆம் திகதி இரவு இங்கு புகுந்த ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகள் ரயில் நிலைய அதிகாரி ஆதித்யா கொர்கெட்டாவைச் சிறை பிடித்தனர்.

பின்னர் சில பத்திரிகை நிருபர்களுக்கு தொலைபேசியில் கதைக்கும்படி அவரை மிரட்டினர் .லால்காரில் இன்று நடக்கும் மம்தா கட்சி பேரணியில் யாரும் பங்கேற்கக் கூடாது என மிரட்டல் விடுக்கும்படி அவரிடம் தெரிவித்தனர். அவரும் அதன்படியே செய்தார். பின் கொர்கெட்டாவையும் புகையிரத நிலையத்தில் இருந்த மேலும் மூன்று புகையிரத ஊழியர்களையும் ரயில் நிலையத்துக்கு வெளியே சிறிது தூரம் கடத்திச் சென்றனர். அங்கு மம்தாவின் பேரணியில் ரயில்வே ஊழியர்கள் யாரும் கலந்துகொள்ளக் கூடாது என எச்சரித்து மூவரையும் விடுவித்தனர். வந்தவர்கள் தீவிரவாதிகள் என்பதை தெரிவிக்கும் வகையிலும் மம்தா கட்சி பேரணியில் பொதுமக்கள் யாரும் பங்கேற்கக்கூடாது என மிரட்டல் விடுக்கும் வகையிலும் அச்சிடப்பட்டிருந்த சில சுவரொட்டிகளையும் அவர்கள் விட்டுச் சென்றனர். இரவு நேரத்தில் உர்மா புகையிரத நிலையம் வழியாக எந்த புகையிரதமும் செல்லக் கூடாது என்றும் கொர்கெட்டாவை அவர்கள் மிரட்டினர். (6-2)




சென்னை புரசைவாக்கத்தில் கருத்துச் சுதந்திரத்தை மறுக்காதே போர்க் குற்றத்தை மறைக்காதே என்ற தலைப்பில் மக்கள் எழுச்சி பொதுக் கூட்டத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ பேசினார். அருகில் இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் நல்லகண்ணு, பேச்சாளர் தமிழருவி மணியன்.

# நினைவின் முகிழ்ப்பில் பரமேஸ்வராக்கல்லூரி

பரந்து விரிந்திருந்த கல்லூரிக்கான நிலப்பரப்பின் மையப் பகுதியில் ஒரு சிவன் கோவில் கட்டப்பட்டிருந்தது. அங்கு சைவ விதி முறைப்படி பூசை அபிஷேகம் கிரமமாக நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கல்லூரி மாணவர்களில் சைவ சமயத்தை அனுசரிப்பவர்கள் தினமும் பாடம் படித்தலுக்கு முன்னர் இக்கோவிலில் கட்டுப்பாட்டுடன் சென்று வழிபட வேண்டும். மாணவர்கள் இரு வரிசையில் கோவில் முகப்பினூடே நுழைந்து உட்செல்வார்கள். அச் சமயம் ஆலய மணி அசைக்கப்பட்டு மணியோசை எழுப்பிக் கொண்டிருக்கும்.

உள்ளே சீமெந்து தரையில் மாணவர்கள் ஒழுங்காக வரிசைக் கிரமமாக சப்பாணி கட்டி (சுக்காசனம்) அமர்ந்து கொள்வார்கள். தேவாரங்கள் பாடப்பெற்று இரண்டு நிமிடதியானத்தின் பின் பூசை, கற்பூர ஆராத்தியுடன் முடிவடையும். கனகசபை ஆசிரியர் தேவாரப் பாடல்களை மாணவர்களில் சிலரையும் இணைத்து இசைத்து வந்தார்.

வருடங்கள் தோறும் நாயன்மார்களின் குருபூசை அவர்களுக்குரிய நாட்களில் வெகு விமர்சையாக கொண்டாடப்படும். இவ்வாறான குருபூசை நாட்களிலும் படித்தலுக்கு தடங்கல் ஏற்படாதவாறு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறான சைவ சம்பிரதாயங்களுடன் படித்தலையும் மேற்கொண்டு சைவப் பண்பாடுடையவர்களாக, பெற்றோர்களையும் பெரியோர்களையும் ஆசிரியர்களையும் பணிவுடன் மதிப்பவர்களாக, சமுதாயம் போற்றும் நல்ல பண்புகளை கொண்டவர்களாக கல்லூரியிலிருந்து வெளியேறும் போது அம் மாணவர்கள் திகழ்ந்தார்கள்.

### மூத்தவர்களை மதிக்கும் பண்பு

இற்றைக்கு மூன்று அல்லது நான்கு பத்தாண்டுகளாக இளம் சமுதாயம் ஒரு புதிய கோணத்தில் சிந்திக்க முற்படத் தொடங்கியுள்ளதை அவதானிக்கலாம். தங்களால் எதுவும் முடியும் என்ற மனப்போக்கும் பெரியோர்களை, வயதுக்கு மூத்தவர்களை மதிக்காத தன்மை மட்டுமன்றி அவர்களை நேரடியாக வன்சொற்களை பாவித்து மனமுடையவும் செய்கின்றார்கள். சில குடும்பங்களில் தாய், தந்தையர்களையே நோகடிக்கிறார்கள். இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று அரசியலில் தமிழ் மக்களின் அகிம்சை வழி போராட்டத்தை அரசாங்கங்கள் கண்டு கொள்ளாமல் புறக்கணித்ததும் அதனால் தடுமாற்றம் கொண்ட பெரியவர்களை மிஞ்சிய இளம் சமுதாயம் தங்களினால் சாதிக்க முடியும் என்று ஆயுத கலாசாரத்தை பின்பற்றும் போது ஏற்பட்ட மனமாற்றங்களை கூறலாம்.

இரண்டாவதாக தென்னிந்திய திரைப் படங்களின் தாக்கங்கள் என்று சொல்லாம். தமிழ் திரைப்படங்கள் இன்று இளம் வயதினருக்கு எல்லா வன்முறைகளையும் செயல் முறையில் கற்றுக் கொடுக்கின்றன. ''என்னை நீ ஏன் பெற்றாய்? என்றும் அதற்கும் மேலாக இன்னும் மோசமான கேள்விகளை கேட்கும் அளவுக்கு சினிமா இளம் சமுதாயத்திற்கு கற்றுக் கொடுக்கின்றது. அங்ஙனம் கேள்வி கேட்பவன் பின் தானும் அவ்வாறான ஒரு தந்தையாகுவான் என்ற சிற்றறிவு கூட இல்லாத வகையில் சினிமா வசனங்கள் எழுதப்படுகின்றன.

இந்த இளம் சமுதாயத்தின் சிந்தனைகள் தெளிவு பெற வேண்டுமாயின் சிறு பருவத்திலிருந்தே சமயப் பண்பாட்டை ஒழுகிப் பழகும் விதத்தில கல்வியை கற்பிக்க வேண்டும். அதனால் இன்றைய சமுதாயம் மீட்சிபெற சிறு வயதினரை நல்ல சூழலில் கல்வி கற்கச் செய்தல் அவசியமாகின்றது. பரமேஸ்வராக் கல்லூரி ஸ்தாபிக்கப்படுமாயின் மீண்டும் இதனைச் செய்ய முன்நிற்கும் என ஆணித்தரமாக நம்பலாம்.



PARAMESHWARA COLLEGE NUCLEUS OF THE JAFFNA CAMPUS

### இசை நிகழ்ச்சிகள்

சைவ விழுமியங்களை மட்டுமன்றி இசை நாடக வளர்ச்சிக்கு பரமேஸ்வராக் கல்லூரி ஆற்றிய தொண்டையும் பாராட்ட வேண்டும். ஒரு குறிப்பிட்ட தினத்திலிருந்து பத்து நாட்களுக்கு இசைக் கச்சேரிகள் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறுவதும் வழக்கம். மாலை 6.00 மணிக்கு மங்கல வாத்தியமான நாதஸ்வரத்துடன் ஆரம்பித்து இரவு பத்து மணி வரை யாழ்.குடா நாட்டில் அன்றிருந்த கர்நாடக இசை விற்பன்னர்களின் சங்கீத கச்சேரிகள் தொடர்ச்சியாக இடம்பெறும்.

சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் தென்னிந்தியாவிலிருந்தும் கர்நாடக இசைப் பாடகர்களை வரவழைத்து இசைக்கு மெருகூட்டப்பட்டது.

இவ்வாறு சங்கீத அறிவையும் இசை ஞானத்தையும் மாணவர்களுக்கு ஊட்டி அவர்களின் இரசிப்புத் தன்மையையும் இசை ஞானத்தையும் கலையார்வத்தையும் பெருக்கிட வித்திட்டது எனலாம் .

இக்கல்லூரி நாடகங்களை பழக்குவதிலும் அவற்றை அரங்கேற்றுவதிலும் பின் நிற்கவில்லை. பின்னரான காலப்பகுதியில் (1960 களில்) ''லண்டன் கந்தையா'' என்ற நாடகம் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டு பலரது பாராட்டுக்களையும் பெற்றிருந்ததை அக்கால சந்ததியினர் அறிவர். இந்த ''லண்டன் கந்தையா'' நாடகத்தை உருவாக்கியவர் சானா எனும் புனைப் பெயரைத் தாங்கிய சண்முகநாதன் என்பவர். பரமேஸ்வராக் கல்லூரியின் ஆசிரியராக பணியாற்றியவர். இவர் நாடகத்துறைக்கு தலைமை தாங்கி பல மாணவர்களை நாடகத்துறைக்குள் உள்வாங்கி பிற்காலத்தில் சிறந்த நடிகர்களாகினர்.

இலங்கை வானொலியின் நாடகங்களில் பங்குபற்றி நடித்தவர்களில் பலர் பரமேஸ்வராக் கல்லூரியில் 'சானா' மாஸ்டரிடம் நாடகம் பயின்றவர்களேயாகும். அப்புக்குட்டி இராசகோபால், தர்மலிங்கம், கனகலிங்கம் போன்றவர்கள் இலங்கை வானொலியில் பிரபல்யங்களாக விளங்கினார்கள்.

### விளையாட்டுத்துறை

விளையாட்டுத்துறையிலும் பரமேஸ்வராக் கல்லூரி முன்னணி வகித்தது எனலாம். நீண்டு பரந்த விளையாட்டு மைதானம், உதைபந்தாட்டம், மட்டைப்பந்தடி போன்ற விளையாட்டுக்கள் இடம்பெற்றன. உதைபந்தாட்டத்தில் பரமேஸ்வராக் கல்லூரி 1946 ஆம் ஆண்டு யாழ். மாவட்ட சம்பியனாகியது இன்னும் நினைவிலுள்ளது. இரண்டாவது (ஜுனியர்) அணி 1953, 1954, 1955 ஆகிய மூன்று வருடங்களும் தொடர்ந்து சம்பியனாகி ஒரு சாதனையை ஏற்படுத்தியிருந்தது.

ஆர்.எஸ்.குமாரசாமி மாஸ்டரின் வழி நடத்தலின் கீழ் விளையாட்டுத்துறை திறம்பட செயற்பட்டது. கைப்பந்தாட்டம், மட்டைப் பந்தடி போன்ற விளையாட்டிலும் உயரம் பாய்தல், நீளம் பாய்தல் மற்றும் ஓட்டங்களிலும் பல சாதனைகளை புரிந்துள்ளது. மாணவர்களை ஆறு (06)குழுக்களாக பிரித்து பிரம் மா, விஷ்ணு, உருத்திரா, மகேஸ்வரா சதாசிவா பரமேஸ்வரா என்னும் பெயர்களில் வருடம் தோறும் விளையாட்டுப் போட்டிகள், உடற் பயிற்சிப் போட்டிகள் நடைபெற்று வந்தன.

பரமேஸ்வராக் கல்லூரி ஆரம்பத்தில் சு.நடேசபிள்ளையை (சேர்.பொன். இராமநாதரின் மருமகன்) அதிபராக கொண்டிருந்தது. அதன் பின்னர் சி.சிவபாதசுந்தரம் என்பவராலும் பின் ஞானப்பிரகாசம் என்பவராலும் அதிபர் பதவி வகிக்கப்பட்டு வந்தது. நடேசபிள்ளை காங்கேசன்துறை தொகுதியில் யூ.என். பி.சார்பில் போட்டியிட்டு வென்று தபால் தந்தி அமைச்சராயிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கனக நமநாதன்**
சட்டத்தரணி - தலைவர்
பரமேஸ்வரா கல்லூரி பழைய
மாணவர் சங்கம் - யாழ் கிளை

---

## பிரபாகரனுக்காக சாமியை தூக்கியெறிந்த ஐ.பி.எஸ்.அதிகாரி

### திருச்சி வேலுச்சாமி தெரிவிப்பு

(சென்னை)

சீமான் கைதைக் கண்டித்தும் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்தும் புதுக்கோட்டையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சசிகலாவின் கணவர் ம.நடராஜன் மற்றும் திருச்சி வேலுச்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருச்சி வேலுச்சாமி பேசுகையில் ,

இந்திய இறையாண்மைக்கு எதிராக சீமான் பேசினார் என்று அவர் மீது குற்றம் சாட்டி உள்ளே தள்ளப்பட்டிருக்கிறார்.

பிரபாகரன் இறந்து விட்டதாக தொலைக்காட்சிகளில் செய்திகள் வெளியானபோது இதைக்கண்டு அதிர்ச்சியான ஐ.பி.எஸ். அதிகாரி ஒருவர் நேரே வீட்டுக்குச் சென்று பூஜை அறையில் இருந்த வெங்கடாஜலபதி படத்தை தூக்கப்போட்டு உடைத்தார்.

அவர் மனைவி காரணம் கேட்ட போது என் தலைவன் பிரபாகரனை காப்பாற்றாத இந்தச்சாமி எனக்கு இனி தேவையில்லை என்று மனைவிக்கு பதிலளித்தார்.

நம் காவல் தெய்வம் வருமா? வராதா? என்று எதிர்பார்த்து காத்திருக்கி றோம். இதையெல்லாம் பார்க்கும் போது ஒரு நடிகரின் வசனம் தான் நினைவுக்கு வருகிறது. வர வேண்டிய நேரத்தில் கட்டாயம் வருவார்.

சாதி , இனத்தின் பேரில் கலவரத்தை தூண்டுகிறார். என்று தான் சீமான் மீது வழக்கு. சிங்களவனும் இல்லை. சிங்களமும் இல்லை. இந்தியாவில் இல்லாத அவனைப் பற்றி பேசினால் எப்படி கலவரம் மூளும்.

இந்தியாவிலேயே இருக்கும் இந்தியை எதிர்த்து பேசியவர்களுக்கு எத்தனை தேசிய பாதுகாப்பு சட்டத்தை பாய்ச்சுவது? என்று கேள்வி எழுப்பினார். (6-2)

---

## 2011 ஆம் ஆண்டை சர்வதேச இரசாயன ஆண்டாக ஐ.நா.சபை பிரகடனம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை 2011 ஆம் ஆண்டை சர்வதேச இரசாயன ஆண்டாக பிரகடனப் படுத்தியுள்ளது.

இந்த நிலையில் சுமார் 70 ஆண்டுகால வரலாற்றைக் கொண்டுள்ள இலங்கை இரசாயன அமைப்பு பல நிகழ்வுகளை இலங்கையிலும் ஏற்பாடு செய்துள்ளது.

குறிப்பாக 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி முதல் 4 நாட்களுக்கு பொருட்காட்சி மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் குறித்து பல்வேறு அம்சங்கள் நடத்தப்படவுள்ளன.

இலங்கையில் நடைபெறவுள்ள நிகழ்வுகள் தொடர்பாக பிஜியின் தென்பசுபிக் பல்கலைக்கழகத்தின் சேதன உறுப்பு இரசாயன சிரேஷ்ட பேராசிரியரும் இலங்கை இரசாயன கல்லூரி பட்டதாரி பயின்றவர்களுக்கான விசேட விரிவுரையாளருமான கலாநிதி சுப்பிரமணியம் சோதீஸ்வரம் தகவல் தருகையில்,

2011 ஆம் வருடம் இரசாயனத்தின் சர்வதேச வருடமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது.

2011 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை உலகம் முழுவதும் இரசாயனத்தின் முக்கியத்துவம் எடுத்துக்காட்டப்படும்.

இலங்கையில் உள்ள இரசாயனவியல் நிறுவனம் இதற்கு தயாராகின்றது.

2011 ஆம் ஆண்டு ஜனவரி 27,28 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் திறப்பு விழா கொண்டாடப்படவுள்ளது.

அந்த திறப்புவிழாவில் பொதுமக்களின் வரவை எதிர்பார்த்து இரசாயனம் நமது வாழ்க்கையோடு எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்று எடுத்துக் காட்டுவதற்கு பல முறைகள் கையாளப்படும்.

இரசாயனத்தின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள குறிப்பிட்ட தினத்தில் பண்டார நாயக்க ஞாபகார்த்த மண்டபத்திற்கு வருகை தருமாறும் அவர் கேட்டுள்ளார். (6)

வேண்டுமென்றே செய்யப்பட்ட தவறு மன்னிக்கப்படக் கூடாததாகும்.

*-அப்துற்-றஹீம்*

வலம்புரி

T.P. 021 567 1530

Web: www.valampurii.com

e-mail: editor@valampurii.com

# மரத்தில் கட்டிய மேர்வினின் நிலைமை நாட்டின் பொருளாதாரத்திலும் உள்ளது

## ஐ.தே.க. எம்.பி. கலாநிதி ஹர்ஷா டி சில்வா கருத்து

(கொழும்பு)

நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷா டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் ஊழியர் சேமலாப நிதி ஆகியவற்றில் சட்டத்துக்கு புறம்பான வகையில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர்,

அண்மைக்காலமாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனை சாதனை முன்னேற்றத்தை பதிவுசெய்துள்ளபோதும் இந்தவளர்ச்சி வழமைக்கு மாறான செயற்பாடுகளின் மூலம் ஈட்டப்பட்டதாகும்.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை இன்று கசினோ சூதாட்ட களத்தைப்போன்று மாறியுள்ளது. இந்த நிலைமை முழுநாட்டையுமே பொருளாதார நெருக்கடியில் ஆழ்த்தும்.

வோல் ஸ்ரீட்டின் வீழ்ச்சியே அமெரிக்கப் பொருளாதாரத்தை நிலைகுலைய செய்ததென்பதனை மறந்துவிடக்கூடாது. மத்திய வங்கியின் நிதிக் கொள்கைகள் பொருத்தமுடையதாக அமையவில்லை.

மேர்வின் சில்வா அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவரை மரத்தில் கட்டியதற்கு நிகரான ஓர் நிலைமையே நாட்டின் பொருளாதாரத்தில் காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)

# காணி பிடிக்கிறார் கௌதம புத்தர் உறுதிக்காரச் சிவன் எங்கே?

வடக்கில் தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் நடக்கின்றதோ இல்லையோ கௌதம புத்தபிரான் மட்டும் வடக்கில் அதிக காணிகளைக் கைப்பற்றி விட்டார்.

வீதிகள், குளங்கள், அரசமரங்கள், கடற்கரையோரங்கள் எங்கும் கௌதம புத்தபிரானின் குடியிருப்புகள் எதற்காக இப்படி?

அறத்தின் வழியில் அகிம்சையின் பாதையில் மனுக்குலத்தை வழிப்படுத்த போதித்த கௌதம புத்தபிரானுக்கு சிவனின் குடும்பம் குடியிருக்கும் வடக்கில் ஏன் இத்தனை விருப்பு?

ஓ! தன் பக்தர்கள் வடபுலத்தில் குடியேற்றப் படுவதற்கு முன்னதாக தான் குடியிருக்க வேண்டும் என்பதற்காகவா?

பரவாயில்லை, நிலையில்லாத இந்த உலகில் இவை மட்டும் நிலையாகிவிடுமா என்ன? இவையெல்லாம் தற்காலக் கவலைகள் தான்.

யுத்தத்தில் தோற்றவனைவிட வென்றவனுக்கே அதிக கவலை என்று கூறியவர் கௌதம புத்தபிரான்.

எனவே அவரின் காணி சுவீகரிப்புக் குறித்து நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. ஆனாலும் சொந்தக்காணிக்காரச் சிவன் குடும்பம் தம் வீட்டில் குடியிருக்க முடியாமல் இருப்பதை நினைக்கும் போதுதான் மனம் வெதும்புகின்றது.

எத்தனையோ சைவாலயங்கள் யுத்தத்தால் உடைந்து சிதைந்து போயுள்ளன. பல ஆலயங்கள் கவனிப்பாரற்று பூசை வழிபாடுகள் ஏதும் அற்று இருண்டு போயுள்ளன.

நிலைமை இதுவாக இருக்கும் போது அவசர அவசரமாக கௌதம புத்த பிரான் காணி பிடிப்பது அவ்வளவு நல்லதல்ல.

இந்து மதத்திற்கும் பௌத்தத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு.

இந்து மதக்கடவுள்கள் அதாவது சிவனின் குடும்ப உறுப்பினர்கள் பலர் விகாரைகளில் வைத்து வழிபாடாற்றப்படுகின்றனர்.

அதேநேரம் சமய கிரியை முறைகளிலும், அனுஷ்டானங்களிலும், சிற்ப சாஸ்திரங்களிலும் இந்து-பௌத்த கொள்கைகள் ஒத்துப் போவதை அவதானிக்க முடியும்.

நிலைமை இதுவாக இருக்கும் போது வடபுலத்தில் அதிலும் குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக வன்னிப் பெருநிலப்பரப்பிலும், யாழ். குடாநாட்டிலும் புத்தபிரானை பிரதிஷ்டை செய்வதென்பது உள்நோக்கம் கொண்டதாகும்.

எனவே சமயங்கள் கூறும் அறவழிகளைப் பின் பற்றுவதே மனித குலம் மேன்மையுறுவதற்கான வழியாகும். இதைவிடுத்து சமயத்தால், இனத்தால் மக்களை பிரித்து விரோதங்களை தோற்றுவிப்பதை தெய்வங்கள் ஒரு போதும் ஏற்பதும் இல்லை; அவை நிலைக்க விடுவதும் இல்லை.

ஆகையால் இலங்கை திருநாட்டில் அவரவர் வாழ்வியல் கோலங்களைப் பின்பற்றவும் தத்தம் சமய விழுமியங்களைத் தாம் வாழும் இடங்களில் நிலைநிறுத்தவும் கூடிய சட்டங்கள் உருவாக்கப்பட்டு அவை நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். இல்லையேல் பிரதிஷ்டைகளுக்கு தனியான பாதுகாப்பு அமைப்புகள் தேவையானவையாக இருக்கும்.

# பிதிர்களை திருப்திப்படுத்தவும் தோஷங்கள் நீங்கவும் அனுஷ்டிக்கப்படும் ஆடி அமாவாசை விரதம்

இந்துக்களின் பண்பாட்டில் தனிச்சிறப்பான செயற்பாடுகளில் நம்முன்னோர்க்குச் சிரத்தையுடன் சிரார்த்தங்கள், பிதிர் வழிபாடுகள், தானதர்மங்கள் செய்வது குறிப்பிடத்தக்கதாகும்.

பிதா வழியினரை அமாவாசைத் திதியிலும், மாதா வழியினரைப் பூரணைத் திதியிலும் மனத்திருத்தி நன்றிக்கடனாகப் பிதிர் வழிபாடுகள் செய்வது எம் மக்கட்குரிய பக்குவமான செயற்பாடாகும்.

இந்த விதத்திலே ஆடி அமாவாசைத்தினத்திலே நம்மூதாதையாரை நன்றியுடன் மனத்திருத்திப் பிதிர்களைத் திருப்தி செய்யவும் பிதிர் சாபங்கள் தோஷங்களிலிருந்து விடுபட்டு எதிர்காலத்தில் இவ்வுலக வாழ்வில் சகல சௌபாக்கியங்களைப் பெறவும் ஆன்றோர் காட்டிய சமய நெறிகளில் பிதிர்கடன் வழிபாடு எடுத்துக் கூறப்படுகின்றது.

ஒருவருடத்தில் தை மாத முதல் ஆனி மாதம் வரையான காலம் உத்தராயணம் எனவும் ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையான காலம் தெட்சணாயணம் எனவும் வகுக்கப்பட்டுள்ளது. உத்தராயண காலம் கோடைகாலமாகவும் தெட்சணாயண காலம் மாரிகாலமாகவும் கொள்ளப்படும்.

பூவுலகமக்கட்கு ஒருவருடம் தேவர்கட்கு ஒருநாளாகவும் காலை நேரம் உத்தராயணம் எனவும் தேவர்களின் மாலைப் பொழுது தெட்சணாயணமாகவும் காலையும் மாலையும் இறைவழிபாடுகட்கு உகந்ததாக வகுக்கப்பட்டுள்ளது.


தெட்சணாயணம் ஆரம்பமாகும் ஆடிமாதம் ஆடிப்பிறப்பு, ஆடி அமாவாசை, ஆடிச் செவ்வாய், ஆடிப்பூரம், ஆடிக் கிருத்திகை, ஆடிச் சுவாதி, ஆடி வெள்ளி எனப்புண்ணிய தினங்கள் பலவற்றைக் கொண்டதாக மக்கள் நற்பண்பு, ஒழுக்கம், நன்றியுடமை என்பவற்றைக் கொண்டு நல்வாழ்வு வாழ இறையருளைப் பெற வழிகாட்டுவதாக அமைந்திருக்கின்றது.

ஆடிமாதத்து அமாவாசை நாளிலே மகாவிஷ்ணுவின் உடம்பிலிருந்து தோன்றியதாகக் கருதப்படும் தர்ப்பையும், கார் எள்ளும், துளசியும் கொண்டு பிதிர்த்தர்ப்பணம் செய்வது பிரதான கடமையாகவும் புனித நீர்நிலைகளிற் சென்று நீராடி வழிபாடுகள் செய்வது தனிச்சிறப்பாகவும் கருதப்படுகின்றது.

இந்தப் பிதிர்கடன்களைச் செய்வதன் மூலம் எம்முன்னோரின் மனம் நிறைந்த ஆசிகளையும் ஆயுள், செல்வம், புகழ் என்னும் நல்வாழ்வுகளையும் பெறலாம் எனவும் இதனை உதாசீனம் செய்வது பிதிர்சாபங்களாற் துன்பங்களை அனுபவிக்க நேரிடும் எனவும் சமய நூல்கள் அறிவுறுத்துவதனால் நாமும் இந்நாளில் பிதிர்க்கடன்களைச் செய்து நல்வாழ்வு வாழ முயல்வோமாக.

*-நீர்வை மணி*

# உளவியல் தாக்கத்தினால் செஞ்சோலை மாணவி மரணம்



செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் வளர்ந்த மாணவி ஒருவர் தமது தற்போதய நிலையினை எண்ணியதால் ஏற்பட்ட உளவியல் தாக்கத்தினால் உயிரிழந்துள்ளார்.

செஞ்சோலை மாணவி ரவீந்திரன் புஸ்பமலர்ஜெயந்தி (சாளினி) என்பவரே உயிரிழந்தவராவார்.

மூன்று வயதாக இருக்கும் போது 1994 ஆம் ஆண்டு செஞ்சோலையில் இணைந்து கொண்ட சாளினி தனது இறுதிக்காலம்வரையில் செஞ்சோலையிலேயே வாழ்ந்து வந்தார். செஞ்சோலை மாணவிகளிடையே கல்வி, கலை மற்றும் விளையாட்டில் சாளிளி முன்னிலையில் விளங்கிவந்தார்.

செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டுவந்த குறித்த மாணவி போர் மற்றும் அதன் பின்னான நெருக்கடிகள் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் வவுனியா ரம்பைக்குளத்தில் உள்ள டொன்பொஸ்கோ பெண்கள் சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டுவந்தார்.

க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகப்பிரிவில் கல்வி பயின்ற அவர் போரின் பின்னர் தான் மீண்டும் அநாதையாக்கப்பட்டதாக சக மாணவர்களிடம் மிகுந்த கவலை வெளியிட்டதாக அவருடன் பராமரிக்கப்பட்டு வருகின்ற மாணவிகள் தெரிவித்துள்ளனர்.

போரின் பின்னர் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த அவர் நேற்று இரவு திடீர் சுகவீனமுற்று உயிரிழந்துள்ளதாக சக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

செஞ்சோலை மற்றும் காந்தரூபன் அறிவுச் சோலையில் பராமரிக்கப்பட்டுவந்த குழந்தைகள் முதல் மாணவர்கள் வரையான. நூற்றுக்கணக்கான மாணவர்கள் சரியான பராமரிப்பின்மை உரிய கவனிப்பின்மையால் மிகுந்த உளவியல் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

தமது எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ள நிலையில் தம்மை ஆற்றுப்படுத்த யாராவது முன்வருவார்களா என்ற ஏக்கம் அந்த மாணவர்களிடம் அதிகரித்துள்ளமையை சாளினியின் பிரிவு வெளிப்படுத்துகின்றது என்று காந்தரூபன் அறிவுச் சோலையின் மூத்த மாணவன் ஒருவர் தெரிவித்தார். (ந-5)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## ஆசிமொழிகள்



எல்லோரும் முக்தர்கள் ஆகட்டும், அதாவது தாங்கள் முக்தர்கள் என்பதை உணரட்டும் என்று பிரார்த்திக்கிறேன். அவர்கள் மீண்டும் கனவு காண்பதனால் அவர்களது கனவுகள் எல்லாம் அமைதியும் ஆனந்தமும் நிறைந்த கனவுகளாக இருக்கட்டும் என்று நாம் பிரார்த்திப்போம்.

பக்தியைப் பற்றிக்கொள். நான் உன் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டுள்ளேன் என்பதை எண்ணி, சலனமின்றி இரு. இதையும் அதையும் எண்ணி மனத்தைச் சஞ்சலப்படுத்தாதே. ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பிரச்சாரம் செய். உன்தாகத்தைத் தணித்த பாத்திரத்தைப் பிறருக்கும் கொடு. வாழ்வின் இலட்சியம் உனக்குக் கைகூடட்டும் - இது எனது ஆசீர்வாதம்.

தத்துவம்,அது இது என்று பொருளற்ற குப்பைகளால் உன் மூளையைக் குழப்பிக் கொள்ளாதே, உனது கொள்கை வெறியால் பிறரைக் குழப்பாதே. நீ செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று - ஸ்ரீராமகிருஷ்ணரைப் பிரச்சாரம் செய், பக்தியைப் பிரச்சாரம் செய். வேலை செய்து கொண்டே போ - இதற்காக உன்னை நான் ஆசீர்வதிக்கிறேன். எம்பெருமானின் திருநாமத்தைப் பிரச்சாரம் செய்யப்பா!

# சீன தங்கச் சுரங்கத்தில் இடம்பெற்ற தீ விபத்தில் 16 தொழிலாளர்கள் பலி


(பீஜிங்)

சீனாவில் தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 16 தொழிலாளர்கள் பலியாகினர். சுரங்கத்தில் சிக்கியுள்ள மேலும் ஏழு தொழிலாளர்களை மீட்கும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. சீனாவின் ஷான்டோங் மாகாணம் ச்ாவோயுவான் நகரில் லியுசோன் தங்கச் சுரங்கம் அமைந்துள்ளது. இங்கு கடந்த 6 ஆம் திகதி இரவு திடீரென தீப்பிடித்தது.

அப்போது சுரங்கத்தில் 300 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியில் இருந்தனர். தீப்பிடித்ததால் சுரங்கத்திற்குள் பயங்கர புகை மூண்டது. உடனடியாகத் தொழிலாளர்களை வெளியேற முடியவில்லை. இது குறித்து தகவல் அறிந்த மீட்புப் படையினர் விரைந்து வந்து சுரங்கத்திற்குள் சிக்கிய 300 தொழிலாளர்களை மீட்டனர். ஆனாலும் தீ விபத்தால் எழுந்த புகையில் மூச்சுத் திணறி 16 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் ஏழு தொழிலாளர்கள் சுரங்கத்திற்குள் சிக்கியுள்ளனர். அவர்களை மீட்க தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (6-2)

# அரசியலில் குதிக்கிறார் பெனாசிர் புட்டோவின் மகள்

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலிசர்தாரி-மறைந்த முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ தம்பதியின் மகளான பக்தவார். தீவிர அரசியலில் ஈடுபட முடிவு செய்துள்ளார்.

இது குறித்து சர்தாரி-பூட்டோ குடும்பத்தின் நெருங்கிய நண்பரான சர்மிளா பரூக்கி கூறியதாவது,

பாக்தவாரின் முடிவை நான் வரவேற்கிறேன். சமுதாயத்தில் அடித்தட்டு மக்களுக்காகவும் பாடுபட்ட அவரது தாயின் (பெனாசிர்) பணியை பக்தவார் தொடர்வார். என்றார்.

இந்நிலையில் பக்தவாரின் சகோதரரும் பாக் மக்கள் கட்சி (பி.பி.பி) தலைவருமான பிலாவல் கூறுகையில்,

தீவிர அரசியலில் நுழைய இருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன. அதில் உண்மை இல்லை என்றார். (6-2)

# சர்ச்சைக்குரிய புதிய ஆவணங்களை வெளியிட விக்கிலீக்ஸ் முடிவு

(பெர்லின்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவ நடவடிக்கை தொடர்புடைய இரகசிய ஆவணங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்திய விக்கிலீக்ஸ் இணையதளம் மேலும் சில சர்ச்சைக்குரிய இரகசிய ஆவணங்கள் வெளியிடப்படும் என தெரிவித்துள்ளது.

விக்கிலீக்ஸ் இணையத்தள செய்தித் தொடர்பாளர் டேனியல் ஷிமிட் அசோசியேட் அச்சகத்திற்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டியின் போது இதைத் தெரிவித்தார்.

ஏற்கனவே வெளியிடப்பட்ட இராணுவ இரகசிய ஆவணங்களைப் போன்று மேலும் சில சர்ச்சைக்குரிய ஆவணங்களை வெளியிடப்போவதாக அவர் தெரிவித்துள்ளார். ஆனால் எதனுடன் தொடர்புடைய ஆவணங்கள் என்பதை அவர் குறிப்பிட்டு சொல்லவில்லை.

இவ்வாறு இரகசிய ஆவணங்கள் வெளியிடப்படுவதால் அரசாங்கம் சிறப்பாகச் செயற்பட் இது வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (6-2)

# வெள்ளப்பாதிப்புக்கு இந்தியா தான் காரணம்

## பாகிஸ்தான் குற்றச்சாட்டு

செனாப் நதியின் அளவுக்கு அதிகமாக வெள்ளநீரை இந்திய அதிகாரிகள் திறந்து விட்டதால் பாகிஸ்தானில் பெரும்பாலான பகுதிகள் தண்ணீரில் மூழ்கி விட்டதாக அந்நாடு குற்றஞ்சாட்டியுள்ளது. இந்திய எல்லையை அண்டியதாக அமைந்துள்ள பாகிஸ்தானின் சியால்கோட் மாவட்டம் , வெள்ளத்தில் தத்தளிக்கிறது. வீதி, புகையிரத போக்குவரத்து துண்டிக்கப்பட்டு பல்வேறு பகுதிகள் தனித் தீவுகளாக மாறியுள்ளன.

செனாப்நதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கே இதற்கு முக்கிய காரணம் என்று பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தியா, பாகிஸ்தான்இடையே ஓடும் செனாப் நதியில் அளவுக்கு அதிகமான வெள்ளநீரை இந்திய அதிகாரிகள் திறந்து விட்டதால் சியாக்கோட் மாவட்டம் முழுவதும் தண்ணீரில் மூழ்கி விட்டதாக பாகிஸ்தான் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அந்நதியில் வெள்ளம் தொடர்ந்து நீடிப்பதால் குஜ்ரன்வாலா , குஜ்ராத் , ஹாசியாபா உள்ளிட்ட மாவட்டங்களில் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் இமாசல பிரதேசத்தில் உற்பத்தியாகும் செனாப் நதி ஜம்முகாஷ்மீர் வழியாக பாகிஸ்தான் செல்கிறது.

செனாப் நதி வெள்ளம் காரணமாக ஜம்மு - காஷ்மீர் பகுதியில் இதுவரை 130 க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதாகவும் 600 க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை என அறியவருகிறது. (6-2)

# பிரபல ஹொலிவூட் நடிகை ஜூலியா இந்து மதத்துக்கு மாறியுள்ளார்



(புதுடில்லி)

ஹொலிவூட்டின் பிரபல நடிகை ஜூலியா ராபர்ட்ஸ் வயது (42). இந்து மதத்துக்கு மாறிவிட்டார். தற்போது இவர் கோவிலுக்குச் சென்று பிரார்த்தனையில் ஈடுபட்டு வருவதோடு அடுத்த பிறவியிலாவது நான் நிம்மதியாக இருக்க வேண்டும். என மனமுருகிக் கூறியுள்ளார்.

ஒஸ்கர் விருது பெற்ற ஹாலிவூட் நடிகையான ஜூலியா ராபர்ட்சின் பெற்றோர் பாதிரி வேதம் மற்றும் கத்தோலிக்கக் கிறித்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள். கிறித்தவ நாடான ஜோர்ஜியாவில் தான் ஜூலியா பிறந்துள்ளார்.

ஆனால் அவர் இப்போது இந்து மதத்துக்குரிய சடங்குகளை கடைப்பிடித்து வருகிறார். அவர் நடித்து வரும் ஈட் பிரே அண்ட்லவ் என்ற படத்தின் கதைப்படி நாயகி விவாகரத்து பெற்றவள். உணவுக்காக் இத்தாலிக்கும் ஆன்மீகத்துக்காக இந்தியாவுக்கும் அன்புக்காக இந்தோனேசியாவிலுள்ள பாலித் தீவுக்கும் செல்கிறாள். இப்படத்தின் படப்பிடிப்பு கடந்த ஆண்டு அரியானாவிலுள்ள பட்டோடி என்ற இடத்தில் இடம்பெற்றது. அங்கு ஹரி மந்திர் என்ற இடத்தில் இடம்பெற்றது. அங்கு ஹரி மந்திர் என்ற கோவிலின் சுவாமி தர்மதேவ் என்ற துறவியைச் சந்தித்து ஆசி பெற்றார் ஜூலியா.

மேலும் தன்னுடைய குழந்தைகளின் பெயர்களையும் இந்துப்பெயர்களாக மாற்றிக் கொண்டார். அப்போதே அது பரபரப்பான செய்தியாக பேசப்பட்டது. இதையடுத்து இப்போது அவர் முழுமையாக மாறிவிட்டார். அடிக்கடி கோவிலுக்குச் சென்று பிரார்த்தனையில் ஈடுபடுகிறார்.

இது குறித்து அவர் கூறுகையில் , நான் என் குடும்பத்தாலும் நண்பர்களாலும் வஞ்சிக்கப்பட்டேன். அடுத்த பிறவியிலாவது நான் அமைதியுடனும் நல்ல ஆதரவுடனும் வாழ வேண்டும் என்றார்.

ஜூலியாவின் இந்த மாற்றம் பற்றி சுவாமி தர்மதேவ் கூறியதாவது,

படப்பிடிப்பு நடந்த இடத்தில் ஒரு கோவிலில் அரங்கம் போடப்பட்டிருந்தது. அங்கு பக்தர்கள் சிலர் தீபம் ஏற்றி, பத்திகள் கொளுத்தி வைத்து வழிபட்டனர். ஜூலியாவும் அங்கு சென்று , தீபத்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்டார். நான் அவரது கையில் சிவப்புக் கயிறு கட்டிவிட்டேன். அவரது நெற்றியில் திலகமிட்டேன். மேலும் , அவர் தனது தனிச் செயலர் மூலம் , நோய்வாய்ப்பட்டுள்ள தாயின் உடல் நலம் தேறுவதற்காக பிரார்த்தனை செய்யும் படி என்னிடம் கேட்டுக்கொண்டார். அவர் புறப்படும் முன் , நான் அவரிடம் , நீங்கள் உணவு அல்லது அன்பு இரண்டையும் தேர்வு செய்யாவிடிலும் , பிரார்த்தனை செய்ய மறந்து விடாதீர்கள். அது உங்கள் வாழ்வின் ஒரு அங்கமாக இருக்கட்டும் எனக் கூறினேன். அவரும் புன்னகையுடன் அதை ஏற்றுக் கொண்டார். இவ்வாறு தர்மதேவ் தெரிவித்தார்.

அமெரிக்காவிலுள்ள, இந்து சர்வதேச சங்கத்தின் தலைவர் ராஜன் சேத , ஜூலியா வின் முடிவை வரவேற்றுள்ளார். ஜூலியின் இம் முடிவு, இணையத்தளங்களில் சூடாக விவாதிக்கப்படுகிறது.அவரை ஆதரிப்பவர்களைப் போலவே அவரை எதிர்ப்பவர்களும் உள்ளனர். (6-2)




# பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புகளால் இந்தியாவுக்குத் தொடர் அச்சுறுத்தல்

## அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

பாகிஸ்தானிலிருந்து செயல்பட்டுவரும் லஷ்கர்-இ- தொய்பா , ஜெய்டி-இ-முகமது ஆகிய தீவிரவாத அமைப்புகளால் இந்தியாவின் பாதுகாப்புக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் இருந்து வருவதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது.

அதேபோல் வங்கதேசத்தில் செயல்பட்டு வரும் ஹர்கத் உல் ஜிகாத் இ இஸ்லாமி என்ற தீவிரவாத அமைப்பும் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக உள்ளது. தீவிரவாதத்தால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று எனவும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தீவிரவாத சக்திகள் மூலம் கடந்த 2009 ஆம் ஆண்டில் மட்டும் இந்தியாவில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

குறிப்பாக காஷ்மீர் , வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் நக்ஸல் பாதிப்பு மாநிலங்களில் அதிக உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளதாக தீவிரவாதம் தொடர்பாக அமெரிக்கா வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-2)



லண்டனில் வரும் 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடக்க இருக்கிறது. இதற்காக லண்டனை பசுமை மிக்க நகராக மாற்ற மிகுந்த பீரயத்தனம் செய்து வருகின்றனர். வாகனங்களால் சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுக்க பீஜிங், பாரிஸ் நகரில் அமுல்படுத்தப்பட்டது போல், போக்குவரத்துக்கு சைக்கிள்களை பயன்படுத்துவதை ஊக்குவிக்க துவங்கியுள்ளனர். இதற்காக வாரத்தில் ஒரு நாள் கார், பஸ் போன்ற வாகனங்களை ஒதுக்கிவிட்டு சைக்கிள்களை பயன்படுத்தும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. படத்தில் சைக்கிளில் அமர்ந்தபடி போஸ் கொடுப்பது லண்டன் மேயர்போரி ஸ் ஜான்சன்.

# ஹைடர், அஜ்மல் அசத்தல் ஆட்டம்

# இன்னிங்ஸ் தோல்வியிலிருந்து பாகிஸ்தான் அணி தப்பியது

(பிறிமிங்காம்)

ஹைடர், அஜ்மலின் சிறப்பான இணைப் பாட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணி இன்னிங்ஸ் தோல்வியிலிருந்து மீண்டது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலி விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 6ஆம் திகதி பிறிமிங்காமில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் 72 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 251 ஓட்டங்களை எடுத்தது.


இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 179 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த பாகிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 291 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஒரு கட்டத்தில் 153 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 7 விக்கெட்டுக்களையிழந்து திணறியது. பாகிஸ்தான் அணியின் சுல் ஹார்னைன் ஹைடர் 200 பந்துகளில் (15 பவுண்டரிகள் உட்பட 88 ஓட்டங்களையும் சகிட் அஜ்மல் 79 பந்துகளில் 6 பவுண்டரிகள் உட்பட 50 ஓட்டங்களையும் எடுத்து மீட்டெடுத்தனர்.

பந்துவீச்சில் சுவான் 6 விக்கெட்டுக்களையும் அன்டர்சன், பிரோட், பின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்கள்.

இப் போட்டியில் இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட்கை வசும் உள்ள நிலையில் 112 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னணியிலுள்ளது.

இந்நிலையில் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.



## உதைபந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)


மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் யாழ். மாவட்ட அழைக்கப்பட்ட முன்னணிக் கழகங்கள் பங்கு பற்றும் 7 பேர் கொண்ட மின் ஒளியினாலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

முதலாவது போட்டியில் வடமராட்சியில் பலம் வாய்ந்த இரு அணிகளான சக்கோட்டை சென்சேவியர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரவெட்டி கலட்டி ஐக்கிய விளை யாட்டுக்கழகமும், பிற்பகல் 4.00 மணிக்கு புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா அணி மோதவுள்ளதுடன் இச் சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் பலம் வாய்ந்த இருபது அணிகள் பங்கு பற்றவுள்ளன.

இதில் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரிக்கும் அணிக்கு 20 ஆயிரம் ரூபாய் பணப்பரிசும், வெற்றிக்கேடயமும், இரண்டாம் இடத்தை பெறும் அணிக்கு 10 ஆயிரம் ரூபாய் பணப்பரிசும் வெற்றிக்கேடயமும் மூன்றாமிடத்தை பெறும் அணிக்கு 5 ஆயிரம் ரூபாய் பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் ஆட்டநாயகன் விருது தலா 2 ஆயிரம் ரூபாயும் வெற்றிக் கேடயமும் வழங்கப்படும் என்று மைக்கல் விளையாட்டுக்கழக தலைவர் அறிவித்துள்ளார். (ந-3,24)

# முத்தரப்பு கிரிக்கெட் தொடர் நாளை தம்புள்ளயில் ஆரம்பம்

## இலங்கை அணியில் ஜெயசூர்யா நீக்கம்



(தம்புள்ள)

இலங்கை, இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் தொடர் நாளை தம்புள்ளயில் ஆரம்பமாகின்றது.

இத் தொடரில் இலங்கை அணியில் சனத் ஜெயசூர்யா நீக்கப்பட்டுள்ளார்.

இலங்கை, இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் தொடர் நாளை தம்புள்ள ரங்கிரிய மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இதில் நாளை நடைபெறும் முதலாவது போட்டியில் இந்தியா–நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.

இத் தொடரில் ஒவ்வொரு அணிகளும் மற்ற அணியுடன் தலா இரண்டு முறை மோத வேண்டும். புள்ளியடிப்படையில் முதலிரண்டு இடங்களைப்பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும்.

இத் தொடருக்கான இலங்கை அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் ஆரம்ப அதிரடித்துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூரியா நீக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணி வருமாறு,

குமார் சங்கக்கார (அணித்தலைவர்), மஹேல ஜெயவர்த்தனா, திலகரட்ண டில்சான், உபுல் தரங்க, அஞ்சலோ மத்யூஸ், திலான் சமரவீர, கபுகெதர, சாமரசில்வா, சுராஜ் ராண்டீவ், அஜந்த மெண்டிஸ், லசித்த மலிங்க, நுவான் குலசேகர, டில்கார பெர்ணான்டோ, ரங்கண ஹேரத், பெரேரா.

# யாழ். மாவட்டத்தில் சிறந்த அணி

# பல்கலைக்கழக கிரிக்கெட் அணி தரவரிசையில் முதலிடத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்றல் விளையாட்டு கழகம் நடத்தும் 2010ஆம் ஆண்டிற்கான சிறந்த கழக அணியை தெரிவு செய்யும் தரவரிசையில் நேற்று வரை நடைபெற்ற போட்டிகளின் பிரகாரம் யாழ். பல்கலைக்கழக அணி 25 புள்ளிகளை பெற்று முதலாமிடத்தில் உள்ளது.

அத்துடன் ஜொலிஸ்ரார் கழக அணி 23 புள்ளிகளை பெற்று 2ஆம் இடத்திலும், யாழ். சென்றல் கழகம் அணி 18 புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடத்திலும், சிறி காமாட்சி கழக அணி 15 புள்ளிகளைப்பெற்று 4ஆவது இடத்திலும், கே.சீ.சீ.சீ. கழக அணி 11 புள்ளிகளை பெற்று 5ஆம் இடத்திலும், அரியாலை சென்றல் கழக அணி 8 புள்ளிகளை பெற்று 6ஆம் இடத்திலும்,

ஈகிள்ஸ் கழக அணி 7 புள்ளிகளைப் பெற்று 7ஆம் இடத்திலும், யாழ். ஜொனியன்ஸ்கழக அணி 6 புள்ளிகளைப்பெற்று 8ஆம் இடத்திலும் கிறஸ்கொப்பர்ஸ் கழக அணி, ஓல்டகோல்ஸ் கழக அணி, யூனியன்ஸ் கழக அணிகள் 5 புள்ளிகளைப் பெற்று 9ஆம் இடத்திலும், மானிப்பாய் பரீஸ் கழக அணி, ஸ்ராலின் கழக அணி, ஜங்ஸ்ரார் கழக அணிகள் தலா 3 புள்ளிகளைப் பெற்று 10ஆம் இடத்திலும், சென்றலைட் கழக அணி, பற்றீசியன்ஸ் கழக அணிகள் தலா 2 புள்ளிகளைப்பெற்று 11ஆம் இடத்தில் உள்ளது.

இவ்வருட இறுதியில் கூடிய புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தை கைப்பற்றும் அணிக்கு கிரிக்கெட் ஜாம்பவான்களின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணமும் ரொக்கப் பணப் பரிசாக 10ஆயிரம்ரூபாய்வழங்கப்படும்எனயாழ்.சென்றல் விளையாட்டுக்கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

# இலங்கை அணிதான் முதல்தர கிரிக்கெட் அணி

## அணித்தலைவர் சங்கா பெருமிதம்

(கொழும்பு)

கொழும்பு டெஸ்டில் வெற்றிபெற்று இந்தியா தொடரை சமன் செய்தாலும் இலங்கை அணிதான் சிறப்பாக செயல்பட்டது என இலங்கை அணித்தலைவர் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது,

டெஸ்ட் தொடரில் இந்தியாவை விட அதிக ஓட்டங்கள் மற்றும் அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய அணி இலங்கை தான். மூன்றாவது டெஸ்டின் கடைசி நாள் ஆட்டத்தில் சச்சின் மற்றும் ரெய்னா கொடுத்த பிடிவாய்ப்புக்களை தவற விட்டோம் இது பின்னடைவாக அமைந்தது விட்டது.

இரண்டாவது இன்னிங்ஸில் 300 ஓட்டங்கள் எடுத்திருந்தோம் என்றால் இந்தியாவுக்கு கடும் நெருக்கடி கொடுத்திருக்கலாம். லக்ஸ்மன் சிறப்பாக ஆடி இந்தியாவுக்கு வெற்றி தேடி தந்துவிட்டார்.

நெருக்கடியான நிலையில் மிகவும் ரிலாக்சாக ஆடி ஓட்டம் குவித்தார். கடந்த இரண்டு ஆண்டுகளாக இம் மைதானத்தில் இரண்டாவதாக துடுப்பாட்டம் செய்யும் அணிதான் வெற்றி பெற்றுள்ளது. இது இந்தியாவுக்கும் சாதகமாக அமைந்துவிட்டது.

### ரண்டீவ் அசத்தல்

இலங்கையின் சுழற்பந்துவீச்சாளர் ரண்டீவ் அசத்தலாக செயற்படுகிறார். தன் நம்பிக்கையுடன் அதிரடியாக பந்துவீசி விக்கெட்டுக்களைக் கைப்பற்றி கலக்கினார்.



இனி வரும் டெஸ்ட் தொடர்களில் ரண்டீவ் இலங்கை அணியின் வெற்றிக்கு வழிவகுப்பார் என எதிர்பார்க்கிறேன். இவ்வாறு அணித்தலைவர் சங்கக்கார தெரிவித்தார் .

# புலிச் சந்தேக நபர்களைப் பார்வையிட த.தே.கூட்டமைப்பு அனுமதி கோருகிறது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிச் சந்தேக நபர்களைப் பார்வையிடுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப்,பாதுகாப்பு அமைச்சில் அனுமதி கோரியுள்ளது.

வெலிகந்த புனர்வாழ்வு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிச் சந்தேக நபர்களைப் பார்வையிடுவதற்கு அனுமதி கோரியதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வெலிகந்த புனர்வாழ்வு மையத்தில் சுமார் 3 ஆயிரம் தமிழீழ விடுதலைப்புலிச் சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் தாம் அனுமதி கோரியதாகவும் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் உடல் நிலைமை குறித்துக் கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் அவர்களைப் பார்வையிடத் தீர்மானித்ததாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. (ந-5)

## அபுதாபியில் விபத்து இலங்கையர் பலி

(அபுதாபி)

அபுதாபியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இலங்கையர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். அதிவேக வீதியில் கட்டுப்பாட்டையிழந்த வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில் இச் சம்பவம் நடந்துள்ளது.

இந்த வாகன விபத்தில் மற்றுமொரு இலங்கையர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த நபர் கோமாகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார். உயிரிழந்த நபரின் சடலத்தை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மேலதிகப் பொதுமுகாமையாளர் கே.றுகுணுகே தெரிவித்துள்ளார். (ந-5)

## ஆயுத மோதலின்போது நடந்த...

வரும் சர்வதேச நிபுணரான மார்கொட் வோல்ஸ்ரொம் தலைமையிலான அணியினரால் இத் தகவல்கள் சேகரிக் கப்பட்டு வருகின்றன.

இலங்கை, மியன்மார், கொலம்பியா ஆகிய நாடுகளில் ஆயுத மோதல்களின் போது இடம்பெற்ற பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் குறித்து அவருடைய அணியினரால் தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்று அவர் கூறினார்.

இவரது அணியால் சேகரிக்கப்படும் தகவல்கள் ஐ.நா.செயலாளர் நாயகத்திற்கும் பாதுகாப்புச் சபைக்கும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

பாலியல் வன்முறை என்பது கலாசாரத்தின் ஒரு அம்சமல்ல. ஒரு குற்றச் செயலாகும். இக் குற்றச் செயலைத் தடுத்து நிறுத்துவதற்குக் குற்றவாளிகளுக்குத் தவறாமல் தண்டனை வழங்க வேண்டும்.

அவர்கள் தப்பி விடவோ மன்னிப்பு பெறவோ அனுமதிக்கக் கூடாது என்று மார்கொட் வோல்ஸ்ரொம் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்துள்ளார். (ந-5)

# சஜித்தின் ஆதரவாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவான உறுப்பினர்களுக்கு எதிராகக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கான விஜயம் மேற்கொண்டு நாடு திரும்பியதிலிருந்து இந்த விடயம் குறித்து ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகளைக் குழப்பும் வகையில் கட்சியின் உள்ளேயே அரசாங்கத்தினால் குழுவென்று நியமிக்கப்பட்டுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க கருதுகின்றார்.

இந்தக் குழுவில் கட்சியின் சில உறுப்பினர்கள் தெரிந்தோ தெரியமாலோ ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அண்மையில் சிறிகோத்தாவில் கட்சித் தலைமையகத்தில் தீ மூட்டித் தற்கொலை செய்து கொண்ட ரியன்சி அல்கமவும் இந்தக் குழுவினரால் தூண்டப்பட்ட நிலையிலேயே தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

## இலங்கை அரசுக்கு எதிராக...

அரசியல்வாதிகள், மனித உரிமை ஆர்வலர்கள் போன்றோர் உள்வாங்கப்படவுள்ளனர்.

இக் குழு இன்னும் சில மாதங்களில் செயற்படத் தொடங்கவுள்ளது. இலங்கை அரசின் இனப்படுகொலை நடவடிக்கைகளுக்கான ஆதாரங்களைத் திரட்டும் பணியில் இது முதலில் ஈடுபடும்.

திரட்டப்படும் ஆதாரங்களை வைத்து ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வழக்குத் தாக்கல் செய்யப்படுவதுடன் இந்த ஆதாரங்கள் ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்று பேராசிரியர் இராமசாமி தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களை வகைதொகையின்றி படுகொலை செய்து குவித்த இலங்கை, இந்தியத் தலைவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் எங்கெல்லாம் மனித உரிமைகள் மீறப்படுகின்றதோ அங்கெங்கும் எல்லாம் பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்காக இச் சர்வதேச குழு தவறாது குரல் கொடுக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். (ந-5)


# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி முத்தையா (அப்பா)

(முகாமையாளர் - ஈஸ்வரபகவான் அன் கம்பனி)



நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி முத்தையா அவர்கள் 06.08.2010 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனாரும், முருகேசு தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக்கணவரும், சண்முகவடிவு, கற்பகவடிவு, கிருஸ்ணவடிவு, மகரதவடிவு, திருச்செல்வம், தனலஷ்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வி.ஆர்.கே. இரத்தினசபாபதி (ஜே.பி), சிவானந்தராஜா, அன்னலிங்கம் சுரேந்திரராஜா, சத்தியேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மாமனும். ஓம்சக்தி, யசோதன், ஆதித்தன், ஆதிசக்தி, சிவசக்தி, சுதாகரன், மணிகண்டன், ஞானசக்தி, விஜிதா, கோகுலன், தர்ஷன், விஜயன், மயூரன், பிரியதர்சினி, திபாகரன், மதுரவாணி, காந்தரூபன், சாந்தரூபன், கோமேசன், மேரிசுமா, பிரவீனா, வராகி, வாசுகி, விபூஷன், சாள்ஸ் நிக்ஷன், டெய்சி ஆகியோரின் அன்புப்பேரனும் நிலாந்தி, புராதனி, பிரணவிகா, சஞ்ஜய், ரிவாஷினி ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை (10.08.2010) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

532/1, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
021 222 5919.

தகவல்
குடும்பத்தினர்

(2118)


## குடாநாட்டில் இன்னும் 45...

பட்டு விட்டன. இன்னும் 699 குடும்பங்களே யாழ்ப்பாணத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட வேண்டும்.

அவர்களை மீள்குடியேற்றுவதற்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் ரயில் பாதையோடு இணைந்ததாகப் புதைக்கப்பட்டிருக் கும் நிலக் கண்ணிவெடிகளும் அகற்றப்பட்டு வருகின்றன.

அவை முழுமையாக அகற்றப்பட்ட பின்னர் ரயில் பாதையைத் திருத்தும் வேலைகளை ஆரம்பிக்க முடியும்..

இராணுவத்தினர் ஏனைய மனிதாபிமான அமைப்புகளுடன் இணைந்து நிலக்கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்கள் என்றார். (ந-5)

## பக்திப் பரவசம் பொங்கி...

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்தும் ஏனைய இடங்களிலிருந்தும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகள் மாவிட்டபுரம் ஆலயம் வரை சேவையில் ஈடுபட்டன.

தனியார் மினிபஸ் சேவைகளும் இடம்பெற்றன. ஆலயத்தில் அடியவர்கள் கற்பூரச் சட்டி எடுத்தும் அங்கப்பிரதட்சணம் செய்தும் அடியளித்தும் நேர்த்திக் கடன்களை நிறை வேற்றினார்கள். வீதிக்கு வீதி மாவைக் கந்தனுக் குத் தேங்காய்கள் உடைத்தும் வழிபாடுகளை நிறை வேற்றினார்கள். (ந-5)


## அன்பு வாசகர்களே!

உங்கள் வலம்புரியில் எதிர்வரும் 11.08.2010 (புதன்கிழமை) முதல் ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர் கலாநிதி

க.குணராசா (செங்கை ஆழியான்)

எழுதும்

ஈழத்தவர் வரலாறு

வாசிக்கத் தவறாதீர்கள்.



## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின்

பெறுபேறுகளை மேலும் உயர்த்துவதற்கு

### விசேட இறுதிக் கருத்தரங்கு

- பொது உளச்சார்பும் (நுண்ணறிவும்)
- கணிதமும் தொடர்பாக நுணுக்கமாக அலசி ஆராயப்படும்
- 10.08.2010 இலிருந்து 12.08.2010வரை தொடர்ந்து 3நாட்கள் நடைபெறும். இடநெருக்கடியைக் கருத்தில் கொண்டு முன் கூட்டியே பதிவை மேற்கொள்ளவும்.
- கட்டணம் 350 ரூபா (கையேடுகள் இலவசம்)

| நடைபெறும் இடம் | | நேரம் |
|---|---|---|
| உயர்கலைக் கல்லூரி | (மீசாலைச்சந்தி) | 8.00-10.30 |
| கிறிஸ்ரல் | (நெல்லியடி) | 11.00-1.30 |
| DMI | (ஆரியகுளம் சந்தி) | 2.30-5.00 |
| சுப்றா | (சித்தன்கேணி) | 5.30-7.00 |

(2119)

ஆசிரியர்:த.தவசேகர் B.Sc, P.G.D.E., P.G.D.P, M.Ed(merit)


## உயர்தரப்...

இவர்களில் 2 இலட்சத்து 14 ஆயிரத்து 230 பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகள் எனவும் 54 ஆயிரத்து 694 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் எனவும் ஆயிரத்து 931 பரீட்சை மத்திய நிலையங்களும் 292 இணைப்புப் பரீட்சை மத்திய நிலையங்களும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்காகப் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க கூறியுள்ளார்.(ந-5)

## ஐ.நா...

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் ஐ.நாவின் பொதுச் சபையில் உரையாற்றுவதற்கு மகிந்த ராஜபக்ஷ அழைக்கப்பட்டுள்ளார்.

ஆனால் அரசியல் ரீதியாக ஐ.நாவுடன் ஏற்பட்டுள்ள மோதல்களால் மகிந்த அங்கு செல்லவதா? அதனைத் தவிர்த்துக் கொள்வதா? என்பது தொடர்பில் செயலகத்திற்கும் வெளிவிவகார அமைச்சுக்கும் இடையில் பாரிய கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட ஆசிய சமூக அமைப்பு மத்தியில் மகிந்த உரையாற்றவுள்ளதாக ஐ.நாவின் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் போதும் அதனையும் கைவிட அரசு திட்டமிட்டுள்ளது.

கடந்த வருடம் ஆசிய சமூக அமைப்பு மத்தியில் அப்போதைய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உரையாற்றிய போது அதில்கலந்து கொண்ட மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கடுமையான கேள்விகளைத் தொடுத்திருந்தனர்.

எனவே இந்த வருடமும் இவ்வாறான கேள்விகள் கேட்கப்படலாம் என அரசு அச்சமடைந்துள்ளது. இருந்தபோதும் ஐ.நாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் மேலும் மோசமடைந்ததால் மகிந்த தனது பயணத்தை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.